# களத்தில்

எமது மொழியும் கலையும் பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்வுக்கு ஆதாரமாக நிற்பவை.

தமிழீழ தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன்

திருவள்ளுவர் ஆண்டு 2026 மீனம் 10 (24.03.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு 40P


# 16 போர்க்கைதிகள் விடுதலை

## விடுதலைப் புலிகளின் மனிதநேய நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்திற்கு எதிரேயுள்ள தனியார் வீடொன்றில் தமது விடுதலைக்கு சிறீலங்கா அரசு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத காரணத்தால், மனவிரக்தியுற்று தொடர்ச்சியாக உண்ணாவிரதம் இருந்த போர்க் கைதிகள் 16 பேரினதும் உடல் நிலை பலவீனமுற்றுச் செல்வதைக் கண்டு, மனிதாய அடிப்படையில் அவர்களை விடுதலை செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உத்தரவு வழங்கினார். பங்குனி 16 ஆம் நாள் அம்பாறையைச் சேர்ந்த 28 வயது திசாநாயக்கா, கேகாலையைச் சேர்ந்த 27 வயதான சி. பி. டி. திஸ்சா காந்தலால் ஆகிய இருவரையும் விடுதலைசெய்த தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மூலம் அவர்களை அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் கென்னத் பெர்னாண்டோ அவர்கள் முன்னிலையில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். மறுநாள் 17 ஆம் நாள் மிகுதியான 14 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்விரு நிகழ்ச்சிகளின் போதும் யாழ். அரச அதிபர் பொன்னம்பலம், "ராவய" செய்தித்தாள் ஆசிரியர் விக்டர் ஐவன், சண்டே ஒப்சேவர் ஆசிரியர் அஜித் சமரநாயக்கி, "த ஐலண்ட்" கட்டுரை ஆசிரியர் தாரகி, செய்தித்தாளர் ரட்ணா வீரரட்ணா, பி. பி. சி. யின் தமிழோசைச் செய்தியாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம், தமிழீழக் காவற்றுறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். முதலாவது நிகழ்ச்சியின்போது உரையாற்றிய அரசியற் பிரிவுப்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

**உச்சிமாநாட்டில் விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர் அவர்கள்**



டென்மார்க்கின் தலைநகர் கொப்பனேகனில் பங்குனி 2 ஆம் திகதி ஆரம்பமான உலக சமூக முன்னேற்ற உச்சிமாநாட்டில் , அன்ரன் பொன்ராசா (அரச சார்பற்ற நிறுவனம் சார்பில்)
லோறன்ஸ் திலகர்(மத்திய குழு உறுப்பினர் விடுதலைப் புலிகள்)
திருசின்னமணி (முன்னாள் நகரபிதா லூயிசம் மாநகரம் லண்டன்)
ஆகியோர் பங்குபற்றினர்.

## விபரங்கள் உள்ளே

# எரிபொருட் தடையை நீக்குக!

சிறீலங்காவின் பதிலமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ பிள்ளை வடபகுதி மீதான பொருண்மியத் தடையை உடனடியாக நீக்க வேண்டுமென வற்புறுத்தி உள்ளார். வடபகுதிக்குச் சிறீலங்கா அரசு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிபொருட்களை அனுப்பிவருகின்ற போதிலும், விடுதலைப் புலிகள் தங்களது வாகனங்களுக்குத் தேவையான எரிபொருட்களைப் பயன்படுத்தியே வருகின்றார்கள். உண்மையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருட்களை அனுப்புவதால், விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் பாதிக்கப்படவில்லை. மக்களே இதனால் அல்லலுறுகின்றனர். எனவே வடபகுதிமீதான எரிபொருட் தடையை முற்றாக நீக்கத்தான் வேண்டும் என சிறீலங்காவின் பதில் அமைச்சர் அடித்துக் கூறியுள்ளார்.

## சிறீலங்கா பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

வடபகுதிமீதான பொருண்மியத் தடையை நீக்கி, வடபகுதியில் நிலவும் எரிபொருட் தட்டுப்பாட்டைப் போக்குமாறு, சிறீலங்காவின் 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கு, இரத்தினபுரி மாவட்ட பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த, பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா தலைமையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர் இக்கடிதத்தில் கையொப்பமிட்டவர்களுள் சிறீலங்காவின் ஆறு பதில் அமைச்சர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.



**வெளிநாட்டுத் தூதுக் குழுவினரைக் கைலாகு கொடுத்து வரவேற்கும் தமிழீழத் தேசியத் தலைவர்**




# வெளிநாட்டு இராஜதந்திரிகள்

## முதன் முதலாக யாழ் விஜயம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தின் பின், முதற்தடவையாக 12 பேரைக் கொண்ட வெளிநாட்டு இராஜ தந்திரிகள் குழுவொன்று 07.03.1995 செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டனர். அமெரிக்கத் தூதரக அரசியற் செயலாளர் பயஸ் தியடோர், யப்பானின் முதற் செயலாளர் மசனேரி, நோர்வே தூதரக அரசியல் அதிகாரி பிரால் கார்ட், சுவிஸ் தூதரக அதிகாரி மிகேல், பின்லாந்து அரசியல் அதிகாரி கென்றிக், சுவீடனின் முதலாவது செயலாளர் திருமதி கிறிஸ்டினா, யேர்மனின்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# விசேட வைப்பகம்

"புனரமைப்பு புனர்நிர்மானத்திற்கான அனைத்துலக நாடுகள் அளிக்கும் நிதி பெருமளவு குவிவதால், அந்த நிதி உகந்தமுறையில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யக்கூடிய வகையில், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி வங்கி ஒன்று நிறுவப்படவேண்டும்" என்று விடுதலைப் புலிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் கோரிக்கை

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# கடல் வளம் பேணினால் தன்னிறைவு உறுதி

## - இளம்பரிதி உரை

எமது கடல்வளத்தில் அறுபது விழுக்காட்டைப் பயன்படுத்துவோமேயானால், எமது நாடு பொருண்மியத்தில் தன்னிறைவைக் காணமுடியும். போர்க்காலத்தில் நாம் பத்து விழுக்காட்டுக் கடல்வளத்தைக்கூடப் பெற முடியாமல் உள்ளது என இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க புதிய அலுவலகத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வைபவத்தில் மேலும் தெரிவிக்கும்போது, "எமது கடல்வளத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்து வோமேயானால், உலகில் பொருண்மிய வாழ்வில் நாங்கள் உயர்ந்தவர்களாக இருக்க முடியும்.

எமது நாட்டின் விருத்தி, இந்தக் கடலில்தான் தங்கி நிற்கின்றது. தற்போது இந்தக் கடலின் பத்து விழுக்காட்டு வளத்தைத்தான் பயன்படுத்துகின்றோம். இந்தக் கடலின் வளத்தில் அறுபது விழுக்காட்டு வளத்தைப் பயன்படுத்துவோமேயானால், எமது நாடு பொருண்மியத்தில் தன்னிறைவைக் காணமுடியும்.

சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தை என்ற போர்வையில் மீனவர்களுக்கு மேலும் தடைபோட்டது. ஆனால் நாம் அரசுடன் செய்யப்பட்ட ஒவ்வொரு பேச்சுக்களிலும் கடல்வலயம் பற்றி முதன்மையாக முன்வைத்துப் பேசி வருகின்றோம். எமது மீனவர்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில் அவர்களது அபிலாசைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு.

நாம் கடற்றொழிலை விரிவுபடுத்தும்போது, எமது தமிழீழம் சிறப்பான முறையில் வளரும். எமது நாட்டின் விருத்தி கடலில்தான் தங்கியிருக்கின்றது. எமது வீரர்களின் வலு கடலில் அதிகரித்துள்ளது. எமது கடலில் எமது ஆட்சி முழுமையாக ஏற்பட்டு, நீங்கள் சுதந்திரமாகத் தொழில்செய்யும் வாய்ப்பு விரைவில் கிட்டும்.

இன்பருட்டிக் கிராமத்து மக்கள் கடல்வளத்தைப் பயன்படுத்தி, தங்களை வளர்த்துக்கொள்வது மட்டுமல்லாமல், இந்தக் கிராமத்தையும் வளர்க்கின்றார்கள். இது ஒரு பாராட்டத்தக்கவிடயம். தற்போதைய போர்க்காலத்திலும் நெருக்கடியான நிலையிலும் இந்தச் சங்கம் வளர்ந்து நிற்கின்றது. இப்பகுதி மக்கள் தங்கள் வளங்களைப் பயன்படுத்தித், தங்களையும் அபிவிருத்தி செய்கிறார்கள். மேலும் இச்சங்கம் ஒளிமயம் பெறவேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்" என்றார்.

மேலும் முதன்மை விருந்தினரான யாழ். மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க அதிகாரி திரு. அ. ஜோசேப், சிறப்பு விருந்தினர்களான பருத்தித்துறை மேற்கு கடற்றொழிற் பரிசோதகர் திரு. ந. கணேசமூர்த்தி, தலைமைச்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# மண்ணின் நிகழ்வுகளை யதார்த்தமாகப் படைக்க வேண்டும்

## -புதுவை

"இந்த மண்ணில் படைக்கப்படுகின்ற போராட்ட இலக்கியங்கள், உலக இலக்கியங்களுக்கு நிகராக அமைய வேண்டும். போராட்ட இலக்கியம் படைப்பவர்களின் தொகை அரிது. இப்படைப்பாளிகள் இந்த மண்ணின் நிகழ்வை யதார்த்தமாகப் பதிவுசெய்ய வேண்டும்."

பொன். கணேசமூர்த்தியின் "தூரம் தொடுவானம்" என்ற நாவல் வெளியீட்டு விழா, அண்மையில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசும்போது, "போராட்டத்தில் கலை, இலக்கியவாதிகளின் பங்கு பெரிது. இந்த மண்ணின் செய்திகளைச் சொல்கின்ற படைப்புக்கள் தேவை" என்றார்.

திரு. ஆ. தேவர் அண்ணா இந்த நிகழ்விற்குத் தலைமை வகித்துப் பேசும்போது, "படைப் பாளிகளுக்கு பாரிய சமூகப்பொறுப்பு உள்ளது. தமிழக எழுத்தாளர்கள் எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும்விதமாக எழுதிவருகின்றார்கள். இந்த நிலையில் எமது படைப்பாளிகள் போராட்ட உண்மை நிகழ்வுகளைப் பதிவு செய்யவேண்டும்" என்றார்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அங்கு உரையாற்றும்போது, "இந்த நூலாசிரியர் சமுதாய ஏற்றத்திற்காகத் தமது இலக்கியப்பணியை படைக் கருவியாகக் கொண்டுள்ளார். தமது கலைத்துறை மூலம், நூலாசிரியர் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்துவருகின்றார்" என்றார்.

# ஒட்டிசுட்டானில் சாதனை

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின்" உறங்கிய தொழில்களுக்கு புத்துயிர்ப்பு" வழங்கும் முயற்சியிலே ஒட்டிசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை ஒரு சாதனை மையமாக மிளிர்ந்துள்ளது.

1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடங்கிய புகழ்பெற்ற இரண்டாம் ஈழப்போரின்பின், செயலற்றுப் போய்க் கிடந்த இத்தொழிற்சாலை, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழிற் பகுதியின் அயராத முயற்சியிலே பாரிய திருத்தவேலைகள் மற்றும் தொழில் நுட்ப மாற்றம் என்பன செய்யப்பட்டு, இன்று உற்பத்தியைத் தொடங்கி, மிகக்குறுகிய காலத்திலேயே போருக்கு முந்திய உற்பத்தி மட்டத்தின் 80 விழுக்காட்டு அளவை வேண்டும்போது, கேள்விக்கேற்ப உற்பத்தி செய்ய க்கூடிய நிலையை அடைந்துள்ளது. போருக்கு முன்பு இங்கு நாளொன்றுக்கு 6000 ஓடுகளும் 4000 செங்கல்போன்ற பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன.தற்போது இங்கு 6000 ஓடுகளும் 2000 வேறு பொருட்களும் உற்பத்தி செய்யபடுகின்றது

# நன்னீர் ஓடை? கந்தரோடை

கந்தரோடைப் பகுதியில் உவர்நீரை நன்னீராக்கும் முயற்சி, குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் உள்ள கிணறுகள் கொத்தணி முறையாகத் தெரிவுசெய்யப்பட்டு, உவர்நீரை நன்னீராக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 31 கிணறுகளில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மூன்று கிணறுகளில் உவர்த்தன்மை முற்றாக நீங்கியுள்ளதாகவும் ஏனையவற்றில் உவர்த்தன்மை 60 விழுக்காடு மாற்றமடைந்துள்ளதாகவும் இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியிலாளர் திரு. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த பருவமழையின் தொடக்கத்துடன், இத்திட்டம் இவரால் தொடங்கப்பட்டது. இதன்போது ஒவ்வொரு கிணறும் 30 இற்கு மேற்பட்ட தடவைகள் இறைக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேபோன்ற முயற்சிகள் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டால், இன்னும் ஐந்து முதல் ஆறு ஆண்டுகளில் அனைத்து உவர்நீரையும் நன்னீராக்க முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை கந்தரோடையில், உவர்நீர்க் கிணறு – ஆய்வு பயனாளிகள் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

# விரைவில் நாலாங்கட்டப் பேச்சு யாழில் தொடங்கும்

## - பலபத்த பென்டி

விடுதலைப் புலிகளுக்கும் – அரசிற்கும் இடையேயான நான்காம் கட்டப் பேச்சுக்களுக்காக அரசதரப்புப் பிரதிநிதிகள் குழு மிக விரைவில் யாழ்ப்பாணம் செல்லும். எனினும் எந்த நாளில் செல்லும் எனக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. இவ்வாறு அரச தரப்புக் குழுத் தலைவரும் சனாதிபதியின் செயலாளருமான பாலபத்த பென்டி தெரிவித்துள்ளார்.

சண்டே லீடர் செய்தித்தாளுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுடனான நான்காங் கட்டப் பேச்சுக்களில் மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தம் என்ற கட்டத்துக்கு நகர்த்துதல், மற்றும் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறப்பு ஆகியவை பற்றி கலந்துரையாடப்படும்.

நான்காங் கட்டப் பேச்சுக்களின் போது அரசு தயாரித்துள்ள தீர்வுத் திட்டம் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் அரசின் ஏனைய தலைவர்களும் தீர்வுத் திட்டத்தின் இறுதி வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். புனர்வாழ்வு நடவடிக்கைகளை தீர்மானித்துவரும் அமைச்சரவைக் குழுவிடமிருந்து திட்டங்களை அரச தரப்புக் குழு பெற்றுக்கொள்வதற்குக் காத்திருக்கிறது எனவும் கூறினார்.

# வீரபுரம் வீடமைப்புத் திட்டத்தில் சிங்களவருக்கு ஒதுக்கீடு தமிழ் மக்கள் ஆட்சேபனை

செட்டிக்குளப் பகுதியிலுள்ள வீரபுரம் வீடமைப்புத்திட்டத்திற்கு அருகேயுள்ள 400 ஏக்கர் காணி பெரும்பான்மை இனமக்களுக்கான வீடமைப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள செயல் நியாமற்றதென அங்குள்ள தமிழ்மக்கள் ஒன்று திரண்டு வந்து, அதிகாரி களிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். வீரபுரம் வீடமைப்புத்திட்டம் தமிழ்ப்பிரதேசத்திலேயே உள்ளது.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# புத்தளம் வீதியில் புளொட் குழுவின் கொலை வெறி

அண்மையில் புத்தளம் – அநுராதபுரம் வீதியின் 10 ஆம் மைல்கல் பகுதியில் வைத்து மூன்று பொதுமக்களை புளொட் குழுவினர் சுட்டுக்கொன்றுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தமிழர்; இருவர் முசுலிம்கள்.

இது குறித்து கொழும்பு மூத்த இராணுவ அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், இம்மூவரும் வவுனியாவிலிருந்து புத்தளம் சென்று, உழவுப்பொறியின் பொறியை விற்பனைசெய்துவிட்டு, லொறியில் வவுனியா திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது 13 ஆம் மைல்கல் பகுதியில்வைத்து, இவர்கள்மீது புளொட் குழுவினர் தாக்குதல் நடத்தினர். புளொட் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டின் மத்தியில், லொறிச்சாரதி ஒருவாறு தப்பி, லொறியைப் புத்தளம் நோக்கிச் செலுத்தினார். தாக்குதல் நடத்தியவர்கள் இன்னோர் வாகனத்தில் விரட்டிவந்து, 10 ஆம் மைல்கல் பகுதியில் வைத்து, லொறிமீது மீண்டும் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் லொறியில் வந்த மூவரும் பலியாகினர். மற்றுமோர் தமிழ்ப் பொதுமகன் காயமுற்றார்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...



## அச்சுறுத்தல் ஆகாது

"அடிச்சாவது, அப்பம் தீத்துவேன்" என்றவன் கதையாக "பேச்சுவார்த்தை பயனளிக்காது போனால் இராணுவத் தீர்வை அதுவும் விரைவாக பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவகையில் பயன்படுத்துவோம்" என சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அவசரகால நிலமையை மேலும் நீடிப்பதற்கான விவாதத்தில் கூறியுள்ளார். அத்துடன் நிற்காது, மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமுக்கு விஜயம்செய்து இராணுவவாதத்திற்கு ஆசியும் ஆதரவும் உண்டென உறுதிப்படுத்தும் வகையில் "முடியாமற் போனால் நானும் சீருடை அணிந்து களம் புகுவேன்" என வீரவசனம் பேசியுள்ளார். இதனால் திடீர் உற்சாகமுற்ற சிறீலங்காப்படைகள் மாமாங்கம், புன்னைச்சேனை, புளியந்தீவு பகுதிகளில் மோதல் தவிர்ப்பு அமுலில் உள்ள இன்றைய நிலையிலேயே சுற்றிவளைப்புக்களையும், சோதனைகளையும் மேற்கொண்டு மக்களை மனப்பீதியடையச் செய்துவருவதாக, மட்டுநகர் அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் இளங்குமரன் (பாபு) அறிக்கை வெளியிட்டுள்ளார். நிலமை இப்படியிருக்க, "அடிச்சுத் தீத்த வெளிக்கிடுகிற அப்பம் எப்படி இருக்கும்"என்பதை சிறீலங்காவின் அரசியலமைப்பு, நீதி அமைச்சரும் பிரதி நீதியமைச்சருமான பேராசிரியர் பீரிசின் கருத்தரங்குக் கருத்துக்கள் தெளிவாக்குகின்றன. "அரசியலமைப்பு மாற்றம் பெரும்பான்மை இனத்தவரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யத்தக்கதாகவும், அதேசமயம் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் அமைய வேண்டும் என்பதிலேயே சிறீலங்கா அரசு அக்கறை கொண்டுள்ளது; அதிகாரப் பரவலாக்கம் முற்றாக இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டதாக அமையக்கூடாது" என்பது பேராசிரியர் பீரிசின் ஆணித்தரமான கருத்து.

இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து உத்தியோகபூர்வமாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் "புலிகளின் அரசியல் இலட்சியம் சுதந்திர இறைமையுள்ள தனியான தமிழீழம்தான்; ஆனால் தமிழ் மக்களின் சுயாட்சியையும், பாதுகாப்பையும், கௌரவத்தையும் உறுதிசெய்யக்கூடிய உருப்படியான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டால் அதைப் பரிசீலிக்க விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கிறார்கள். இது தொடர்பாக நாம் ஏற்கனவே கூறியிருக்கிறோம். முன்வைக்கும் தீர்வுத்திட்டம் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடியதாக அமைய வேண்டும். முன்வைக்கப்படும் திட்டத்தில் பின்வரும் 4 அம்சங்கள் அடிப்படையாக உள்ளடக்கப்பட்டதாக இருக்கவேண்டும். தமிழ்மக்களின் பிரச்சினை தேசிய இனப்பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும். தமிழ்மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். தமிழ்மக்களின் தாயகக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். தமிழ் இனத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையும் அங்கீகரிக்க வேண்டும். வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் மாநில சுயாட்சியுடைய சமஸ்டித் தீர்வாக முன்வைக்கப்பட்டால், பரிசீலிக்க முடியும். தேசியம், தாயகம், தன்னாதிக்கம் ஆகிய மூன்று அடிப்படை உரிமைகளைத் தமிழ்மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்" என மிகத் தெளிவாக தம் மனக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். இவை நிபந்தனையல்ல! பேசி உணரப்பட வேண்டிய உண்மைகள். இதனடிப்படையில் முன்வைக்கப்படும் தீர்வு பேச்சுவார்த்தை வழியான அமைதியை உறுதி செய்யக்கூடியது என்பது உறுதி. இதைவிடுத்து, "கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை" என்றவன் கதையாக, "பேச்சுவார்த்தை மூலமான தீர்விலும் ஆசை, இராணுவத்தீர்விலும் ஆசை" என தடுமாறாது, அரசியல் நேர்மையுடன் வரலாற்று உணர்வுடன் யதார்த்தபூர்வமான தீர்வை முன்வைக்கவேண்டும். இதற்கு ஒரேவழி பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதே. அச்சுறுத்தல் இந்த முன்னெடுப்புக்களை முறியடித்து, மீண்டும் அச்சுறுத்தல்களை எதிர்த்து நிற்பதற்கான நடவடிக்கைகளை தோற்றுவித்திடும். இது என்றும் இலங்கைத்தீவின் அமைதிக்கு அச்சுறுத்தலாகிவிடும். எனவே, "பழையன களைதலும், புதியன புகுதலும் வழுவனவாகா கால மரபினானே" எனும் தொல்காப்பியனார் வாக்குக்கமைய புதிய யுகத்தை தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பு சந்திரிகாவுடையதே. பந்து அவர் பக்கம், சரியாக பயன்படுத்துவாரா?

# அமைதிக்கான முயற்சிகளில் முன்னேற

## பங்குனி 28 இற்குள் சாதகமான பதில் வேண்டும்

### -தமிழீழத் தேசியத் தலைவர் உறுதியான பதில்

"மக்கள் பிரச்சினைகளை, இராணுவ விளைவுகளின் பின்னணியில் அணுக முற்படுவதே பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாகிறது;

எவ்வித சிக்கலுமின்றி, நல்ல மனத்துடன் தீர்க்கப்படக்கூடிய மக்களின் நாளாந்த வாழ்வின் வழமையைப் பாதிக்கும் பிரச்சினைகளில்கூட கடினமான போக்கினை சிறீலங்கா அரசு கடைப்பிடிக்குமானால், தேசிய இனப்பிரச்சினைகள் தொடர்பான மிகச் சிக்கலானதும் கடினமானதுமான விடயங்களில் தீர்வினை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலைக்கொண்டிருக்குமா என சந்தேகப்படக்கூடிய தன்மைகள் தோன்றியள்ளன. ஆகையினால் மீளவும் ஒருமுறை சிறீலங்கா சனாதிபதி அமைதியை எற்படுத்த விரும்புவதற்கான தீர்மானத்தின் காரணங்களைப் பரிசீலிக்கவேண்டும். பங்குனி 28 இற்குள் சாதகமான பதில் கிடைக்காவிடின், அமைதிக்கான பேச்சுவார்த்தை முயற்சிகளைத் தொடரத்தான் வேண்டுமா? இல்லையா? என்பதனை வேதனையுடன் தீர்மானிக்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகவேண்டிவரும்". இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் சிறீலங்கா சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள பங்குனி 16 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமைதிப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்திற்கு, மக்களது நாளாந்த வாழ்வினை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரக்கூடிய அமைதியான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய தலைவர் பிரபாகரன், கடந்த காலங்களில் போர் நிறுத்தம் தொடர்ச்சியற்றும் உறுதியற்றும் இருந்த காரணத்தினால், அச்சமயங்களில் நடந்த அரசியற் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார். முழுமையான போர் நிறுத்தத்திற்கு வழிசெய்வதில், சிறீலங்கா காட்டிவரும் அலட்சியமான அக்கறையற்ற போக்கினைக் குறிப்பிட்ட அவர், தற்காலிகமாக மோதல்களை நிறுத்துவதே சிறீலங்காவின் நோக்காக உள்ளது எனவும் கூறியுள்ளார். தமிழர் தாயகத்தின் மேலான, மேலாண்மையை நிலைப்படுத்துவதற்கு இராணுவ ஆக்கிரமிப்பை உறுதிப்படுத்தக்கூடிய வழிவகைகளைக் கையாளும் நோக்கிற்தான் மக்களின் மேல் சமூக, பொருண்மியத்தடைகள் சிறீலங்காவால் மேற்கொள்ளப்பட்டன என்பதை விளக்கிய அவர், "மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் இனமுரண்பாட்டின் அடிப்படையில் எழுந்த அரசியற் பிரச்சினையல்ல; இராணுவத்தினர் தந்திரோபாயத்தைக் கருதி ஏற்படுத்திய பிரச்சினைகள். எனவே இவற்றைத் தீர்த்து, மக்களை வழமையான வாழ்வுக்குத் திரும்பவைப்பதன் மூலமே, இரண்டு தேசிய இனங்களுக்கிடையிலும் இழக்கப்பட்டுவிட்ட நட்புறவையும் நல்லபிப்பிராயத்தையும் கட்டியெழுப்ப முடியும்" என வலியுறுத்தி உள்ளார்.

பூநகரிப் பாதையை மக்கள் போக்குவரத்துக்காகத் திறத்தல், அத்தியாவசியப் பொருட்களின் தடைகளை அகற்றுதல், மீன்பிடித்தடைய விலக்கல் போன்ற மக்களின் நாளாந்த வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகளை சந்திரிகா தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் செயலாகக் கருதும் தவறான நிலைப்பாட்டையொட்டி அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்த அவர், இவை விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் என்று கூறுவதைவிட, ஆக்கிரமிப்புக்குள்ளான மக்களின் மனிதாயத் தேவைகளின் அடிப்படையில் எழுந்தவைகள் எனக் கூறியுள்ளார். ஆரம்பக்கட்டப் பேச்சுக்களில் இந்தக் கஸ்டங்களை அகற்றும்படி விடுதலைப் புலிகளால் கேட்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய அவர், பின்னர் இவை வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு, அரசியற் பிரச்சினை என்ற போர்வையிற் இனப்பிரச்சினைக்கு முதலுரிமை வழங்கப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது எனக் கூறியுள்ளார். இந்த மந்தநிலையைப் போக்கும்படி அரசைக் கேட்டபோதிலும் இராணுவ விளைவுகளின் பின்னணியில் மக்கள் பிரச்சினைகளை நோக்குவதினாலேயே, மக்களுடைய அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, இராணுவத்தின் கேந்திர முதன்மைத்துவ நலன்களில் அக்கறை காட்டப்படுகிறது. இதுவே அமைதிப் பேச்சுவார்த்தை க்கான மோசமான அச்சுறுத்தலாக உள்ளது எனவும் விளக்கியுள்ளார்.

இந்த இக்கட்டான பிரச்சினை பற்றிய விடுதலைப் புலிகளின் விளக்க அறிவும், இராணுவ வடிவமைப்புக்களின் எதிர்காலம் பற்றிய அவர்களின் ஊகங்களும் "விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள சில கோரிக்கைகள் மோசமான இராணுவ விளைவுகளைத் தூண்டக்கூடியன" என எழுதியுள்ள சந்திரிகாவின் கடித வரிகளால் உறுதியாக்கப்படுகின்றது எனவும் எடுத்துரைத்த தலைவர் பிரபாகரன், இந்நிலைப்பாடானது வெறும் இராணுவவாதப் பின்னணியுடன் மட்டுமல்லாது, ஓரளவுக்குப் பேரினவாதப் போக்குகளையும் வெளிப்படுத்துகிறது என விளக்கியுள்ளார். இதனாலேயே மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் நாளாந்தப் பிரச்சினைகளை சமரசம் செய்யமுடியாத பாதுகாப்பு விடயங்களாக சிறீலங்கா அரசால் மாற்றப்பட்டு இராணுவ, பொருண்மிய நெருக்கடிகளைத் தமிழர்மேல் ஏற்படுத்தி, இவற்றினை அரசியல் இலாபம் காண்பதற்கான பேரத்துரும்புகளாகப் பயன்படுத்த முற்படும் தன்மையினாலேயே இந்த விடயங்கள் கூட்டுமொத்தமான அரசியற் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின்பொழுது ஆராயப்படவேண்டிய விடயமாக மாற்றப்படுகின்றன என்றார். இதனை அனுமதிக்க முடியாதெனக் கூறிய அவர், "நாளுக்கு நாள் மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்குமாறு கேட்பதை, அரசியற் பிரச்சினைகளில் கலந்துரையாடுவதில் இருந்து நழுவும் முயற்சியெனத் தவறாக விளங்கிக்கொள்ளக்கூடாது" என வலியுறுத்தி உள்ளார். தாம் ஒருபொழுதும் அரசியல் விடயங்களை விவாதிக்க மறுத்ததில்லை எனக்கூறியுள்ள அவர், மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடிய பொருத்தமான அரசியல் மேல் கட்டமானத்தைக்கூட எடுத்துக்கூறும் அளவுக்கு நாம் சென்றுள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே சிறீலங்கா அரசு, இராணுவ விளைவுகளின் பின்னணியில் அணுகுவதே அமைதி முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதே தவிர, அரசியற் பேச்சுவார்த்தை அல்ல என்பதை ஆணித்தரமாக எடுத்தியம்பியுள்ளார்.

# போர் முடிவுறும் நாளை எதிர்பார்த்து மக்கள்

## அமைதி ஏற்படுவதை இழுத்தடிக்கிறது சிறீலங்கா

### -டென்மார்க்கில் திரு. லோறன்ஸ் திலகர் உரை

டென்மார்க்கின் தலைநகரான கொப்பன்காமில் பங்குனி 9 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெற்ற உலக, சமூக, அபிவிருத்தி மாநாட்டுச் செய்தியாளர் மாநாட்டு மண்டபத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகப் பொறுப்பாளரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினருமான திரு.லோறன்ஸ் திலகர் அவர்கள், செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தினார். இலண்டன் லூசியம் பரோவின் முன்னாள் மேயர் திரு. சின்னமணி அவர்களும் அங்கு பிரசன்னமாக இருந்தார். இச்செய்தியாளர் மாநாட்டில் திரு.லோறன்ஸ் திலகர் அவர்கள், அமைதிப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் சிறீலங்கா ஏற்படுத்திருக்கும் "முட்டுக்கட்டைநிலையைக்" கடுமையாக விமர்சித்தார். "இலங்கைத் தீவின் மக்கள் போர்முடிவுறும் நாளை எதிர்பார்த்து நிற்கின்றனர்; ஆனால் சிறீலங்கா அரசோ அமைதியை மீள நிலைநாட்டும் முயற்சிகளில் காலைவாரிவிடுமோ என நினைக்குமளவுக்கு அதன் நடவடிக்கைகள் காட்சியளிக்கின்றன.

தொடக்கத்தில் சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, அமைதியை மீள நிலைநாட்டுவதில் அதிக அக்கறை காட்டுவதுபோல் காட்சியளித்தார். ஆனால் இப்பொழுதோ சிறீலங்கா இராணுவமும் மற்றும் பல்வேறு சிங்களப் பேரினவாத மூலகங்களும் ஏற்படுத்தும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# புதிய நிர்வாக மையமும்
## உள்ளடக்கப்பட வேண்டிய சிறப்பு அம்சமும்

நீண்டகாலமாக வடபிரதேசத்துக்கான தலமை நகரமாக யாழ்ப்பாணம் இருந்துவந்துள்ளது. அண்மைக்காலங்களிற் பல காரணங்களுக்காக இந்நிலை மறுபரிசீலனை செய்யபடவேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்றுவருகின்றது.

தலைநிலத்திலே தற்போதுள்ள ஏதாவதொரு நகரம் தலைநகரம் என்ற அந்தஸ்த்துக்கு (Status) அபிவிருத்தி செய்யப்படலாமா? அல்லது முற்றிலும் புதிதாக ஒரு நகரம் கட்டியெழுப்பப்படவேண்டுமா? என்பது கவனமான ஆராய்வின்பின் தீர்மானிக்கப்படவேண்டியது. எதிர்பார்க்கப்படும் அரசியல், பொருண்மிய, சமூக நோக்கங்களை அடைவதற்கான வாய்ப்பு, பொருண்மியம், தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகள், வளங்கள் முதலிய விடயங்களைக் கவனத்திற்கெடுத்தே இத்தகைய தீர்மானம் எடுக்கப்படலாம்.

உத்தேசிக்கப்பட்டுள்ள நகரத்தில் அமையக்கூடிய சிறப்பு அம்சங்களும், நகரம் உருவாக்குவதற்குவேண்டிய மனப்பதிவும் நகரின் அந்தஸ்த்திலும், செயற்பாடுகள் சார்ந்த நகரின் தன்மையிலும் பெருமளவிற் தங்கியுள்ளது.

மேற்படி புதிய நகரின் அந்தஸ்த்து எத்தகைய அரசியல் அமைப்புக்குள் இப்பிராந்தியம் உட்படவுள்ளது என்பதையும் இப்பிராந்திய நிர்வாகத்தின் அதிகாரவரம்பு எத்தகையது என்பதையும் சார்ந்துள்ளது.

புதிய நகரத்தில் எத்தகைய செயற்பாடுகளுக்கு முதன்மைத்துவம் தேவைப்படுகின்றது என்பதைப்பொறுத்து, ஒரு குறிப்பிட்ட மனப்பதிவைக் கொடுக்கும்வகையில் நகரத்தின் இயற்கைச்சூழல் உரியமுறையில் பயன்படுத்தப்படுவதுடன், கட்டிடச்சூழலும் திட்டமிட்டு உருவாக்கப்படலாம்.

நிர்வாகச் செயற்பாடுகள் முதன்மைத்துவம் பெறுகின்ற நகரத்துக்கும் வணிகம், கைத்தொழில் அல்லது பல செயற்பாடுகளும் முதன்மைத்துவம் பெறுகின்ற நகரங்களுக்கும் நிலப்பயன்பாடு, உள்ள கட்டமைப்பு, கட்டிடங்கள்போன்ற அம்சங்கள் தொடர்பான முன்னுரிமைகள் வேறுபடுகின்றன. இதனடிப்படையில் நகரில் அமையக்கூடிய சிறப்பு அம்சங்களும் அவற்றின் தரமும் வேறுபடும்.

மாங்குளப் பிரதேசம் நிலப்பயன்பாடு குறைந்த பிரதேசமாகும். ஆயினும் இப்பிரதேசம் வடமாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ளதால், மாகாண நிர்வாக நடவடிக்கைகளுக்கு உகந்த இடமாக அமைகின்றது. நகரமயமாக்கலுடன் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது. இதன் வனவளம் பற்றைக்காடாகவும் பயன்குறைந்த சோத்தி மரங்கள் கொண்டதாகவும் உள்ளதால், காடழிப்பு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. இதன் அபிவிருத்தி அடையாத நிலைமை திட்டமிட்ட நகர உருவாக்கலுக்கு ஏதுவாக உள்ளது.

மாங்குளம் என்பது நிர்வாக மையமென்றோ அல்லது வேறு எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் உண்மையில் எதிர்காலத்தில் மாங்குளம் என்பது, வடதமிழீழத்தின் அபிவிருத்தியை உந்திச்செல்லுகின்ற ஒரு மையமாக உருவெடுக்கும்

தற்போதைய அமைப்பில் ஏனைய பகுதிகளில் மாகாணமட்டத்தில் நிர்வாகம் நடைபெறுகின்றபோதும், வடபிரதேசத்தை உள்ளடக்கிய தமிழர் பிரதேசம் முழுவதும் ஒரே அலகாகக் கருதப்படுவதால், வடபகுதியை மட்டும் ஓரலகாகக்கொண்ட நிர்வாக அமைப்பு இல்லை. தமிழர் பிரதேசம் முழுவதும் ஒரே அரசியல் அலகு என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக்கொண்ட எந்த அமைப்பிலும் வடபகுதி முழுமைக்குமான தனியொரு நிர்வாக அமைப்பு செயற்படும் சாத்தியம் மிகக்குறைவு. எனவே உத்தேச நகரம் தமிழர் பிரதேசத்தின் முழுமைக்குமான நிர்வாகமையமாக அமையக்கூடிய சாத்தியம் இருந்தாலன்றி, இது ஒரு நிர்வாகச் செயற்பாட்டுக்கான சிறப்பு நகரமாக அமைவது ஐயமே.

**சிறப்பு அம்சங்களின் அடிப்படைகள்**

புதிய நகருக்கு அமையக்கூடிய சிறப்பு அம்சங்களுள், அடிப்படையாக இருக்கக்கூடியவற்றுள், பின்வருவன முதன்மையான சிலவாகும்.

1. பிரதேசத்தின் இயற்கையமைப்பு, காலநிலை முதலியன.
2. நமது சமுதாயத்துச் சிறப்பியல்புகளான வரலாறு, அரசியல், சமூகம், பண்பாடு மற்றும் தொடர்புடைய அம்சங்கள்.
3. எதிர்காலம் தொடர்பான நமது நோக்கு.

இவை நகரின் பௌதீகச் சூழலில் பிரதிபலிக்கும்போது, உருவாகக்கூடிய சிறப்பம்சங்கள் சிலவற்றை இக்கட்டுரை ஆராய்கின்றது.

> **தமிழீழத்தின் தற்போதைய மாவட்டங்கள் அதன் எல்லைகள் சிறீலங்காவின் தேவைக்கேற்பவே உருவாக்கப்பட்டன. அதனால் தமிழீழத்தின் அபிவிருத்திக்கும், எதிர்காலத் தேவைக்குமாக புதிய நிர்வாகப் பிரதேசங்கள் (மாநிலங்கள்) உருவாக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டு, அதற்கென தெரிவு செய்யப்பட்ட செயற்குழுவால் தமிழீழப் பிரதேசம், 20 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிக்கான தலை நகரங்களும் உத்தேசமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**

**இயற்கையமைப்பு**

இயற்கையமைப்பின் அடிப்படையில் சிறப்பம்சங்களைக்கொண்ட உலகின் பல நகரங்கள் நதிக்கரைகளிலோ, மலைப்பிரதேசங்களிலோ, பெரிய வாவிகளை அண்டியோ அல்லது கடற்கரைப் பிரதேசங்களிலோ அமைந்துள்ளன. உலகின் பிரசித்திபெற்ற நகரங்களான இலண்டன், பரிஸ், மாஸ்கோ, வியன்னா போன்ற நகரங்களில் நதிகள் சிறப்பு அம்சங்களாக விளங்குகின்றன. அவுஸ்திரேலியாவின் நிர்வாகத் தலைநகரமான கன்பரா நகரின் மலைப்பாங்கான சூழல் அதன் சிறப்பம்சங்கள் பலவற்றின் மூலமாக உள்ளது. இதேபோல் கடல், குடாக்கள், வாவிகள்போன்றவற்றைச் சார்ந்துள்ள நகரங்கள் பலவும் இவ்வாறான இயற்கை அமைப்புக்களிலிருந்து சிறப்பம்சங்களைப் பெறுகின்றன.

நமது வடபிரதேசத்தைப் பொறுத்தவரை அது மலைகளையோ, நதிகளையோகொண்ட பிரதேசமல்ல ஆனால் மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டுள்ளது. குடாக்கடலும், கரையோடண்டிய சிறுதீவுகளும், கடலுக்குள் நீண்டிருக்கும் சிறுநிலப்பகுதிகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. எனவே கடற்கரையோரமாகவுள்ள இத்தகையவொரு பிரதேசம் நகருக்கான அமைவிடமாகத் தெரிவுசெய்யப்படின், கடல்சார்ந்த இயற்கையமைப்பு நகரின் சிறப்பம்சங்களின் மூலமாக விளங்கக்கூடும்.

பிராந்தியத்தின் மத்திய பகுதிகளைப் பொறுத்தளவில், ஓரளவிற்கு இயற்கையான சிறப்பம்சங்களாக விளங்கத்தக்கவை குளங்களே ஆகும். பல்வேறு காரணங்களுக்காகப் பிராந்தியத்தின் மத்திய பகுதியே நகரின் அமைவிடத்திற்குப் பொருத்தமாகக் காணப்படின், ஆங்காங்கே அமைந்துள்ள குளங்களுள் ஒன்றோ பலவோ நகரின் சிறப்பம்சமாக உருவாக்கப்படலாம். எனினும் விவசாய நிலங்களுக்கும் முயற்சிகளுக்கும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

முற்கூறிய இயற்கை அம்சங்கள் நகரின் அழகுக்கு முதன்மையான பங்களிப்பைச்செய்கின்ற அதேவேளை, வேறுபல நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக அமையக்கூடும். கடற்கரைப் பிரதேசங்கள் சுற்றுலாத்துறை, பொழுதுபோக்குத்துறை, நீர்சார்ந்த விளையாட்டுத்துறை போன்றவற்றின் அபிவிருத்திக்கும் பொருத்தமானவை. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களின் கிழக்குக் கரையோர பகுதிகளைப்போல் வடபிராந்தியக் கடற்கரைகள் மேற்படி துறைகளில் அபிவிருத்தி செய்யப்படக்கூடியவையா? என்பதும் அதற்குரிய வழிமுறைகளும் ஆராயப்படவேண்டியவை.

இயற்கையாக அமைந்துள்ள அம்சங்கள் ஒருபுறமிருக்க, இயற்கை எழிலைச் செயற்கையான முறையில் நகருக்குள் கொண்டுவருவதும் சாத்தியமே. பல்வேறு சிறப்பம்சங்களுடன்கூடிய பெரிய பூங்காக்கள், நீர்நிலைகள் போன்றவற்றைச் செயற்கையாக உருவாக்கமுடியும். 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளிலே கட்டப்பட்ட ஐரோப்பிய நகரங்கள் பலவற்றில் இவ்வம்சங்களுக்கு முதன்மைத்துவம் கொடுத்துள்ளமை கவனிக்கத்தக்கது. பிரான்ஸ் நாட்டின் 'வேர்செயில்ஸ்' நகரம் மனிதனால் ஆக்கப்பட்ட இயற்கை அம்சங்களுக்காக இன்றும் புகழப்படுகின்றது.

பிரேசில் நாட்டின் தலைநகரமான, நவீனமுறையில் கட்டப்பட்ட பிரேசீலியாவின் சிறப்பம்சங்களிலொன்றாக விளங்கும் மிகப்பெரிய வாவி செயற்கையாகவே உருவாக்கப்பட்டது என்பதும் நகரிலுள்ள இயற்கையின் பசுமைகூடப் பெருமளவிற்குச் செயற்கையாகவே உருவாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நிர்வாகத் தலைநகரான சிறீயெயவர்த்தனபுரக் கோட்டையிலுள்ள பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியைச்சுற்றி அமைந்துள்ள பெரியவாவியும் பெருமளவுக்குச் செயற்கையாகவே அண்மையில் உருவாக்கப்பட்டதே.

நமது நகரங்களுடைய கட்டிடச்சூழல், நமது பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கவேண்டுமென்ற உணர்வுரீதியான தேவை நமது சமுதாயத்தின் பல மட்டங்களிலும் இருந்துவருவது கண்கூடு. பாரம்பரியத்துக்கு மதிப்பளிக்காது உருவாக்கப்படும் நகரம் 'வேரில்லாத மரம்' போன்றது என்ற ஒரு கருத்து உண்டு. இந்த அடிப்படையில் இத்தகைய ஒரு தேவைபற்றிக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளல் நியாயமே.

உத்தேசிக்கப்படு

கின்ற வட பிராந்திய த்துக்கான தலைநகரத்தில் இவ்வாறான செயற்கையாக உருவாக்கப்படும் இயற்கை தேவைப்படுமிடத்து, இதற்குரிய தொழில்நுட்ப, பொருண்மியச் சாத்தியப்பாடுகள் பற்றி நுணுக்கமான ஆய்வு தேவைப்படும். அமைவிடத் தெரிவிலும் இது ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

முற்கூறப்பட்ட பூங்காக்களும் பசுமைப் பகுதிகளும், நமது காலநிலையோடொட்டிய வெப்பச் சூழலின் தீவிரத்தைக் குறைப்பதற்கும் உதவும். மேலும் இவ்வாறான அமைப்புக்களிற் கல்விப் பெறுமானம்கொண்ட

> **இவ் உத்தேச தெரிவின் அடிப்படையில் தமிழீழம் முழுவதற்குமாக "திருகோணமலை" தமிழீழத் தேசியத் தலைநகரமாக அமையவுள்ளது. அதே வேளை, "மாங்குளம்" வடபிராந்தியத்திற்கான புதிய மாநிலத் தலைநகரமாகவும், "கரடியன் ஆறு" (மட்டக்களப்பிலுள்ளது) கிழக்குப் பிராந்தியத்திற்கான தலை நகரமாகவும் அமையவுள்ளன. யாழ்ப்பாணத்திற்குப் பதிலாக, புதிய தலைநகரமாக ஏன்? மாங்குளம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதையே இக்கட்டுரை விளக்குகின்றது.**

அம்சங்களையும் பொழுதுபோக்கு அம்சங்களையும்கொண்ட சிறப்புப் பகுதிகளையும் ஏற்படுத்துவதன் மூலம் அவற்றின் உபயோகம் சார்ந்த பெறுமானத்தையும் அதிகரிக்கலாம். உதாரணமாகத் தாவரவியற் பூங்காக்கள், சிறிய அளவில் விலங்குக் காட்சிச்சாலைகள், சிறுவர்களுக்கான 'வினோத உலகு' திறந்த வெளியரங்குகள், விளையாட்டிடங்கள்போன்ற பலவகையான அம்சங்கள் சாத்தியமானவை அத்துடன் இவ்வம்சங்கள் பொருண்மிய ரீதியிலான சாத்தியப்பாட்டுத் தன்மையும் அதிகரிக்கக்கூடியன.

**கட்டிடச்சூழலும் காலநிலையும்**

கட்டிடச்சூழலைப் பொறுத்தவரை நமது பிரதேசத்தின் காலநிலைக்கேற்ற வடிவமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துதல் அவசியம். இவ்வாறானதொரு சூழல் நகரில் சிறப்பம்சம்மாக அமையலாம்.

நமது பகுதிகளில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நகராக்கம் என்பது இயற்கைச் சூழலை அழித்து காலநிலை, வாழ்க்கைமுறை என்பவற்றுக்கு ஒவ்வாதவகையில், 'கொங்கிறீற்றுக்காடுகளை' உருவாக்குவதைக் குறிக்கின்றது என்பது வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.

சூரிய வெப்பத்தைத் தெறிக்கின்றனவும் உறிஞ்சிக் கதிர்வீசுகின்றனவுமான கொங்கிறீற்றுப்பரப்புக்கள் நமது வெப்பச் சூழலுக்கு வலுவூட்டுகின்றன.

இது தொடர்பாகப் பின்வரும் நடவடிக்கைகள் பொருத்தமாக அமைவதுடன், புதிய நகரம் நமது காலநிலைக்கேற்ற சிறப்பு அம்சங்களைப் பெறுவதற்கும் வழிவகுக்கும்.

1. மரங்களும் செடி, கொடி வகைகளும் திறந்த புல்வெளிகளும் பொருத்தமாயமைந்த பசுமைப் பகுதிகளோடு பின்னிப்பிணைந்த வகையில் கட்டிடச்சூழலை வடிவமைத்தல்.
2. கட்டிடங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் போதிய காற்றோட்டம் இருக்கும்வகையிற் கட்டிடங்களின் அமைவிடங்களும் திசைகளும் திட்டமிடப்படல்.

இ. மயூரநாதன்
-பட்டயம்பெற்ற கட்டிடக் கலைஞர்-

3. நெருக்கமான மத்திய பகுதிகளிலாவது கட்டிடங்கள் கூரையிடப்பட்ட நடைபாதைகளைக்கொண்டிருப்பதை உறுதிசெய்தல்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

# இலங்கைத் தீவில் ஒரு தத்துவப் போராட்டம்

இலங்கைத் தீவில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலாக்கப்பட்ட பின்பும் அமைதித் தீர்வுக்கான வழிமுறைகள் வேகப்படாது, மிகமிக மந்த கதியிலேயே கருமங்கள் நடைபெறுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதித் தீர்வின்மேல் தமக்குள்ள நம்பிக்கையைப் பலமுறை வலியுறுத்தியும் வெளிப்படுத்தியும் வருவது கண்கூடு. திருமதி சந்திரிகா தலைமையிலான சிறீலங்காவின் இன்றைய அரசும் தமிழ் மக்களுடைய தீர்வு மூலமே இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று அடிக்கடி பேசி வருகின்றது. இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசு நடத்திய முதல் மூன்று சுற்றுப்பேச்சுக்களிலும் இணக்கங் காணப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதில் தயக்கங் காட்டி வருவதுடன், இருதரப்புப் பேச்சுவார்த்தையில் (Bi - Lateral Talk) ஈடுபடத்தொடங்கிய சிறீலங்கா அரசு, ஒருதரப்பு முடிவுகளைச் (One Side Decision) செயற்படுத்தத் தொடங்கியுள்ளமையைப் பூநகரி –சங்குப்பிட்டிப் பாதைத் திறப்பு விவகாரத்தில் சிறீலங்கா வெளியிட்டுள்ள அறிவிப்புத் தெளிவாக்குகின்றது.

இந்நிலையில், இத்தகைய தேக்கநிலை தோன்றுவதற்கு உள்ள காரணங்களை மேலெழுந்தவாரியாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இலங்கைத்தீவு 47 ஆண்டுகளாக – அதாவது பிரித்தானியரிடமிருந்து சிங்களவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றகாலம்முதல் தேசிய இனமுரண்பாட்டுக்குள் சிக்கித் தவிக்கிறது. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் மேல், இருவகையான நெருக்குதல்கள் சிங்களஅரசுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலில் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தீவில் வதிப்பிட உரிமையுடன் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்களை சிங்களத் தலைமைத்துவம் நாடற்றவர்களெனச் சனநாயகப் பாராளுமன்றம் எனும் சொற்றொடரில் இயங்கிய அமைப்பினூடாக, சட்டப்படியான செயல் என்ற அடைமொழியுடன் நாடற்றவராக்கியது. பின்னர் இரண்டாவதாக 1948 முதல் 1972 வரையிலான காலப்பகுதியில், வரலாற்றுக்கு முற்பட்ட காலம்முதல் இலங்கைத்தீவின் வடக்கு–கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ்மக்களை ஆக்கிரமிப்புச்செய்து, இனவழிப்புச்செய்யும் கைங்கரியத்தில், அதே சனநாயகப் பாராளுமன்றம் எனப்படும் அமைப்பினூடாக, வெற்றிகரமாக முன்னேறினர்.

சனநாயகம் என்பது, மக்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை மக்களுக்குத் தலைமைதாங்கும் தலைவர்களிலும் தங்கியுள்ளது என்பதற்கு இலங்கைத்தீவு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. இலங்கைத்தீவில் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழிமுறைகளை நான் மேற்கொள்வேன் இலங்கை பிரித்தானியரிடமிருந்து ஆட்சிப்பொறுப்பைப் பெற்றுக் கொள்வதைத் தடைசெய்யவேண்டாம் என்ற நிபந்தனையுடன், தமிழ் மக்களுடன் சேர்ந்து இலங்கைத் தீவை ஆட்சிசெய்யப் புறப்பட்ட டி. எஸ். சேனநாயக்காவும் தனது நிபந்தனையை நிறைவேற்றவில்லை. பின்னர் இலங்கைத் தீவில் தமிழ், கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர்களுக்கென மூன்று சபைகளைக்கொண்ட சமஸ்டி ஆட்சி மூலமே அமைதியும் சுபீட்சமும் மலரும் என அரசியல் தத்துவம் பேசி, பாராளுமன்றத்துள் அடியெடுத்துவைத்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தனது சிந்தனைக்குத் தானே எதிரியாகி, தனிச்சிங்களம் மட்டும் எனும் சட்டத்தின் தந்தையானார். அதற்கு அடுத்தபடியாக அப்போதைய (இப்போதைய) பிரதமரான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா தனது கணவரின் பண்டா–செல்வா ஒப்பந்தத்திற்குப் புத்துயிர் ஊட்டி, தமிழர்களுக்குப் புதுவாழ்வு படைப்பேன் என ஆட்சிப்பீடமேறி, இறுதியில் பிரித்தானிய சோல்பரி யாப்பு வழங்கிய 29 (2) காபந்து உரிமையையும் பறித்து, தமிழ் மக்களை இரண்டாந்தரக் குடிகளாக்கினர். சோல்பரி யாப்பு 29 (2) இன் நிபந்தனை மூலமே பிரித்தானியக் குடியேற்ற வாதிகளின் தன்னிச்சையான செயற்பாட்டினால் இலங்கைத் தமிழர் ஒற்றையாட்சியில் இணைக்கப்பட்டனர். திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவைத் தலைமையாகக் கொண்ட அரசு 1972 இல் தமிழ் மக்களின் அறுதிப்பெரும்பான்மையின்றி தன்னிச்சையாக, பிரித்தானியாவின் இலங்கைப் பாராளுமன்றத்திலிருந்து விலகி, இலங்கையை சிறீலங்கா குடியரசு என நவரங்கலா மண்டபத்தில் பிரகடனப்படுத்தியது. இதனால் இலங்கைத் தமிழர்கள் சட்டப்படி நாடற்றவர்களாகவும் அவர்கள்மேல் படைவழி வலுக்கட்டாய ஆட்சியைத் திணித்த சிறீலங்கா, ஆக்கிரமிப்பு அரசாகவும் மாறிக்கொண்டது. பிரித்தானியாவின் வெஸ்ட்மினிஸ்டர் பாணியிலான அரசுகள் உருப்பெற்ற நாடுகளில் சனநாயகம் தோல்விகண்டு வருவதற்கு முதன்மைக் காரணங்கள் இரண்டு உள்ளன. வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்ற அமைப்பு எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்களிடம் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை வழங்கி, அந்த நாட்டில் உள்ள மக்களிடையேயுள்ள மொழி–மத–பண்பாட்டு வேறு பாடுகளையோ அல்லது கூடிவாழும் மனோபாவம் காணப்படாமையையோ வரலாற்றுத் தன்மைகளையோ கருத்திற் கொள்ளாது, எண்ணிக்கையில் கூடியோரைப் பெரும்பான்மையினராகவும் எண்ணிக்கையில் குறைந்தோரைச் சிறுபான்மையினராகவும் மாற்றிவிடுகின்றது. அத்துடன் சிறுபான்மையினர் என மகுடம் சூட்டப்பட்டவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு (Relies Upon Safe Guards)க் கொடுக்கவேண்டும் என்பதைத்தான் பிரித்தானிய அரசியலமைப்பாளர்கள் கருத்திற்கொண்டு செயற்பட்டார்களே ஒழிய, அம்மக்களுடைய சுயநிர்ணய உரிமையைப் பற்றி கவலை கொள்ளவில்லை. இதனாலேயே இலங்கைபோன்ற நாடுகளில், ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பெரும்பான்மையினர் அனைத்துலகச் சமூகத்தின் முன் தமது இன அழிப்பை, தாயக ஆக்கிரமிப்பைச் சட்டரீதியாகக் காட்டக்கூடிய சட்டவலிமையைப் பெற்றுவருகின்றனர். இதனைத்தான் இவ்விடத்தில் மிகவலுத்தமாகக் கூறவேண்டிய நிலையேற்படுகின்றது. ஏனென்றால், இலங்கைத்தீவில் சிங்களப் பெரும்பான்மை (Majority), தமிழ்ச்சிறுபான்மை (Minority) பிரச்சினை நிலவுவதாகவே அன்றும் இன்றும் இலங்கை அரசும் பின்னர் சிறீலங்கா அரசும் கூறிவருகின்றது. இந்தப் பெரும்பான்மை– சிறுபான்மை வார்த்தைப் பிரயோகத்தின் தத்துவார்த்த ரீதியான ஆழத்தை உணராத சில தமிழ் அறிவுஜீவிகளும் இதனைப் பெரும்பான்மை–சிறுபான்மைப் பிரச்சினையாகவே கூறியும் எழுதியும் வருகின்றனர். இதனால் ஏற்படும் தத்துவப்போரே, இலங்கைத் தீவில் இன்று அமைதித்தீர்வு நோக்கிய முன்னேற்றம் தடைப்படக் காரணமாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் 1972 முதல், அரசற்ற நாட்டினமாக்கப்பட்ட தமிழீழ மக்களின் தேசியப் பாதுகாப்புக்கான (National Security of Tamil Eelam People) ஆயுதமயப்படுத்தப்பட்ட போராட்டத்தை நடாத்தி, தமிழ் மக்களைத் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையான (The Right of Self Determination) அடிப்படை மனித உரிமையை (Basic Human Right) பிரயோகிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க முயல்கின்றனர். இது அனைத்துலகச் சட்டங்களுக்கேற்ப ஏற்புடையதும் சட்டரீதியமானதுமான செயற்பாடாகும். இப்போராட்டம் சட்டபூர்வமானது என்பதனை சமீபத்தில் ஆய்வு அறிக்கையொன்றை வெளியிட்ட, 'இலங்கையின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் ஒத்துழைப்புக்குமான உலக மாமன்றம்' எனும் அமைப்புத் தெளிவாக இனங்காட்டியுள்ளது.

போலந்தின் இடைக்காலப் போர்களின்போது தலைவராகத் திகழ்ந்த யோசுவ் பில்சுட்கி (Jozef Pilsudski), தான் சோசலிசம் என்னும் பெயர்ப்பலகையுடனான புகை வண்டியில் ஏறியதாகவும் ஆனால் தேசியவாதம் (Nationalism) என்னும் பெயர்பொறித்த புகைவண்டி நிலையத்தில் இறங்கிவிட்டதாகவும் கூறினார். இலங்கைத் தீவிலும் பொதுவுடைமைக்குக் கூட்டிச்செல்வதாகக்கூறி, சிங்கள மக்களைப் புகைவண்டியில் ஏற்றிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சிங்களத் தேசியவாதம் என்னும் சிறீலங்காக் குடியரசுப் புகையிரத நிலையத்தில் இறக்கிக்கொட்டிவிட்டு நிற்கின்றது. தமிழ் மக்கள் தங்களது தொடக்கநிலையில் 1972 இல் சிங்களவரின் நிபந்தனை மீறலால் தம்மிடமே வந்துவிட்ட இறைமையைக் கொண்டு தங்களுக்கான ஒரு தாயகத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**பந்நிமாகரன்**

இந்தநேரத்தில் "யேர்மன் சோசல் டெமொகிரட்" தலைவரான கேய்சர் (Kaiser) கூறிய வசனங்களை நினைவுகூற விரும்புகிறேன். "இனி நான் எந்தக் கட்சியையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமில்லை, நான் யேர்மனியர்களை மட்டுமே ஏற்றுக்கொள்வேன்" (I No Longer Recognise Parties; I Recognise Only Germans - Kaiser). தேசியவாதம் விடுதலைக்கான சக்தியாக (Nationalism is a force for Liberation) மாறும்பொழுது அம்மக்களிடையே கட்சி முறைமை இயல்பாகவே அழிந்துபோய் அங்கு விடுதலையை முன்னெடுத்துப் போராடுபவர்களும் தாங்களும் ஒன்றாகிநிற்பது உலகவழமை. இந்த வகையிலேயே இன்று தமிழீழம் என்னும் தமிழர் தாயகத்தை மீட்கப்போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் இரண்டறக்கலந்து, ஒரு சக்தியாக நிற்கின்றனர். இந்த வரலாற்றுத் தன்மையினை உணர்ந்தும் உணராதவர்கள்போல் பல தமிழ் அறிவுஜீவிகள் தமிழீழ அரசுநோக்கிய அரசில் ஒரு கட்சிமுறை நிலவுவதை சனநாயக விரோதப்போக்கு என எழுதி, தமக்கு மனிதாபிமான அனுதாபிகள் எனும் நாமம் தேடிப் பிழைப்பு நடாத்திக் கொண்டிருக்கின்றனர். மனிதாபிமானமின்றித் தமிழரை நடாத்தியதினால்தான், மனிதாபிமானத்திற்காப் போராட்டமே எழுந்தது என்பதோ அல்லது போர்களை முடிவுக்குக்கொண்டு வருவதற்கும் போர் தேவையாகி விடுகின்றது என்பதோ இவர்கள் அறியாததல்ல. நீதிக்கான போரை – அமைதிக்கான போரை நடாத்தி, எமது உடன்பிறப்புக்கள் எமக்காய்த் தம் இன்னுயிரைப் பணயம் வைத்து, மாவீரராகியும் மனைவி, மக்களைப் பிரிந்தும் சொத்துக்கள் சொந்தங்களை இழந்தும் வீரவடுக்கள் தாங்கியும் அங்கங்களைக்கூட அர்ப்பணித்தும் நடாத்தும் புனிதப்போருக்கு களங்கம் கற்பித்தவர்கள் வெட்கி நாணக்கூடிய வகையில், பிரித்தானியாவின் இன்டிப்பென்டன்ட் செய்தித்தாளின் வார இதழ், 12 ஆண்டுகளின் பின்னர், தமிழீழம் என்ற வெற்றி இலக்கை நெருங்கிக்கொண்டிருப்பதாக அழகாகக் கூறியுள்ளது. இந்த நிலையில் இதனை ஏன் எழுதவேண்டி உள்ளது என்றால், அரசியற் பணிவு (Political Obligation) என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகவே இருக்கவேண்டிய ஒரு பண்பாக அறிஞர்களால் கணிக்கப்படுகின்றது. ஆனால் இந்தப் பண்பு இல்லாமல், சுயநலப் பணிவு வெளிநாடுகளில் உள்ள எம்மக்களிடம் அதிகமாக நிறைந்து காணப்படுவதினால்தான் ஆறாயிரத்து ஐந்நூற்றிக்கும் மேற்பட்ட மாவீரர்களும் முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களும் தமது இன்னுயிர்களால் கட்டி எழுப்பியுள்ள தமிழ்த்தேசியம் (Tamil Nationalism) என்பதை அனைத்துலகச் சமூகம் இன்றும் உண்டா? இல்லையா? என அசைபோட்டுப் பார்க்கும் பரிதாபநிலை காணப்படுகின்றது. உரோம் எரிகையில் பிடில் வாசித்த நீரோ மன்னனை விடக் கேவலமாக, நாம் பற்றி எரியும் உடல்களைப் பார்த்தும் இவர்கள் ஏன் எரிகிறார்கள் என்ற இனமான உணர்வுகூட இன்றி, வெளிநாடுகளில் வாழ்வதினாற் தான் எமது மக்களின் உயிராலும் இரத்தத்தாலும் மறுவடிவு பெற்றுள்ள எமது தாயகம், அனைத்துலக அங்கீகாரத்தைப் பெறக் காலதாமதம் ஏற்படுகின்றது. ஆயிரம்கைகள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை, ஆனைகள் இட்டே யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்வதில்லை என்னுமாற்போல் மாவீர தெய்வங்களின் ஆன்ம ஆசிகளாலும், மாமனிதன் பிரபாகரனின் வலிவும் துணிவும் பொலிவும் நிறைந்த வழிகாட்டலாலும் தமிழீழப் போராட்டத்திற்கு உலக அங்கீகாரம் விரைந்து கொண்டிருப்பதைத் திக்கெட்டும் திசை உலாவரும் நாளிதழ்களும், வார சஞ்சிகைகளும் செய்திகளாகவும் கட்டுரைகளாகவும் எழுதி வருவதைக் காண்கின்றோம்.

இந்த நிலையில் அனைத்துலக நெருக்குதல்கள், பொருண்மியப் பாதிப்புக்கள்,

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...

# செய்திச் சிதறல்

## சந்திரானந்த டி சில்வாவுக்கு உதவ ஆலோசனைக்குழு

சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக, புதிதாக நியமனம் பெற்ற சிறீலங்காவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா, குடிசார் சேவையாளராகவே இருப்பதினால் இவருக்கு உதவ என சிறீலங்காவின் முப்படைகளிலும் ஓய்வு பெற்ற சிறப்புநிலை அதிகாரிகளின் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பாணியில் குடிசார் சேவையாளர் ஒருவர் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளது இதுவே முதல் தடவை. முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்கா, ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பதவி விலகியதை அடுத்து, காலியான இப்பதவிக்கு இப்பொழுது சந்திரானந்த டி சில்வா நியமனமாகியுள்ளார். புதிய தேர்தல் ஆணையாளராக தயானந்த திசநாயக்காவை சிறீலங்கா சனாதிபதி நியமித்துள்ளார்.

## சிறீலங்கா இராணுவமும் சார்பாளர்களும் மோதல் தவிர்ப்பை மீறுகின்றனர்

*மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாபு*

தை மாதம் 8 ஆம் திகதி முதல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ள மோதல் தவிர்ப்பினை மீறக்கூடிய வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினரும் அவர்களின் சார்பாளர்களும் உடன்பாட்டு அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பாபு, மாசி 24 ஆம் திகதியளவில் விடுத்த அறிக்கையில் குற்றம்சாட்டியுள்ளார்.

மாசி 22 ஆம் திகதி கொம்மாந்துறையில் பொதுமக்களை ஏற்றிவந்த வாகனமொன்றின் சாரதியும் நடத்துனரும் சிறீலங்காப் படைகளால் தாக்கப்பட்டமை போன்ற பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், சிறீலங்கா இராணுவம் மட்டுமன்றி அதன் சார்பாளர்களும் ஆயுதங்களுடன் வீதிகளில் சோதனைகளை மேற்கொண்டும் விசாரணைகள் செய்தும் அப்பாவிப் பொதுமக்களை உடன்பாட்டிற்கு மாறான வகையில் தொல்லைகளுக்கு உள்ளாக்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

படுவான்கரைக்கு அத்தியாவசிய உணவுகளின் போக்குவரத்து சிறீலங்கா இராணுவத்தால் தடுக்கப்பட்டு வருவதாகவும் வெல்லா வெளியில் 40 ஆம் கிராமப் பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் பகிரங்க இராணுவ ஒத்திகைகளில் ஈடுபட்டு மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. இத்தகைய சிறீலங்கா இராணுவ நடைமுறைகள் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை மீதான சிறீலங்கா இராணுவத்தின் நம்பிக்கையீனத்தை தெளிவுபடுத்துவதுடன் மீண்டும் போரைத் தொடக்குவதை ஊக்கப்படுத்தும் செயல்போல சிறீலங்கா இராணுவத்தின் செயல்கள் அமைந்துள்ளதாகவும் திரு. பாபு கூறியுள்ளார்.

நிலைமை இவ்வாறு இருக்க சிறீலங்கா அரசு ஒருதலைப்பட்சமான குற்றச்சாட்டுக்கள் மூலம் நிலைமையைத் தனக்குச் சாதகமாக்க முனைகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வேளாண் மன்னர் தெரிவில் தேர்வு நடவடிக்கைகள்

தமிழீழத்தின் தன்னிறைவான பொருண்மியத்தைக் கட்டியெழுப்பல் என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் கொள்கையின் அடிப்படையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வடதமிழீழப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டுவரும் வேளாண் மன்னர் தெரிவுப்போட்டியின் தேர்வு நடவடிக்கைகள், தற்போது நடைபெற்று வருவதாக அந்நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. இந்தவகையில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிரைக் கட்டம் கட்டமாகப் பார்வையிடுவதற்கென விவசாயப் போதனாசிரியர்கள், பெரும்பாக ஊழியர்கள், புள்ளிவிபரப் பிரதிநிதிகள், உற்பத்திக்குழுப் பிரதிநிதிகள் அடங்கிய சிறப்புக்குழு அமைக்கப்பட்டு, அவர்களாலேயே இத்தேர்வு மதிப்பீடுகள் வட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறுதிக்கட்டத் தேர்வாக அறுவடை மதிப்பீடுகள் செய்யப்பட்டதும், இக்குழுவால் வேளாண் மன்னர்கள் மாவட்டரீதியாகத் தெரிவு செய்யப்படுவார்கள். சென்ற காலபோகத்தில் ஆறு வேளாண் மன்னர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்குத் தேசியத் தலைவரால் விருதும் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாரம்பரிய விளையாட்டுக்களைப் பயிற்றுவிக்கத் திட்டம்

பாரம்பரிய விளையாட்டுக்களான எல்லே, கிளித்தட்டு, சடுகுடு போன்றவற்றை யாழ் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத்துறையில் பயிற்றுவிப்பதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன.

பல்கலைக்கழகத்தினால் பாரம்பரிய விளையாட்டுக்களில் சிறந்த வீரர்கள் பரிசளித்து கௌரவிக்கப்படுவதற்கான திட்டம் ஒன்றும் ஆராயப்பட்டுவருகிறது.

## வீரபுரம் வீடமைப்புத்திட்டம் சிங்களவர்களுக்கு ஒதுக்கீடு

*— தமிழ் மக்கள் ஆட்சேபம்*

செட்டிக்குளப் பகுதியிலுள்ள வீரபுரம் வீடமைப்புத்திட்டத்திற்கு அருகேயுள்ள 400 ஏக்கர் காணி பெரும்பான்மை இனமக்களுக்கான வீடமைப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள செயல் நியாமற்றதென அங்குள்ள தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு வந்து, அதிகாரிகளிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

வீரபுரம் வீடமைப்புத்திட்டம் தமிழ்ப்பிரதேசத்திலேயே உள்ளது. இந்த வீடமைப்புத் திட்டத்தில் தமிழர்களே வசிக்கின்றனர். இவர்களுக்கு விவசாயச் செய்கைக்கென பகிர்ந்தளிக்கப்படுவதற்காக 400 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த முடிவில் பின்னர் மாற்றம் செய்யப்பட்டது. விவசாயக் காணியில் பெரும்பான்மை இனமக்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்குவதென முடிவெடுக்கப்பட்டது.

அண்மையில் இக்காணியைத் துப்பரவு செய்வதற்கென கனரகப் பொறிகள் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது, வீரபுர தமிழ்க் குடியேற்றக் குடும்பங்கள் ஒன்றுதிரண்டுவந்து, தங்களது ஆட்சேபத்தைத் தெரிவித்தன.

## வாரத்தில் இரு தமிழ்ப்படம் வர்த்தக நோக்கே காரணம்

சிறீலங்காத் தொலைக்காட்சி சேவைகளில் ஒவ்வொரு சேவையிலும் இரண்டு தமிழ்த் திரைப்படங்கள் ஒரு இந்தி அல்லது ஆங்கிலப்படம் என மொத்தம் நான்கு படங்கள் ஒளிபரப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிறீலங்கா தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட அறிக்கையில், தொலைக்காட்சியில் வரையறையின்றி விவரணப்படங்களை திரையிடுவதன் பயனாக சிங்களப் படத்தயாரிப்பாளர்கள், தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம், மற்றும் திரைப்படங்களைக் காட்டுவோர் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக நாம் சிறீலங்கா சனாதிபதியை சந்தித்துப் பல கலந்துரையாடல்களை நடத்தினோம். இதன் பின்னரே தேசியத் திரைப்படக் கைத்தொழிலைப் பாதிக்காது இருப்பதற்காக மேற்கூறிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அத்துடன் தொலைக்காட்சியில் இடம்பெறும் தமிழ்நிகழ்ச்சிகளின் விகிதாசாரம் தமிழர்களின் சனத்தொகைக்கேற்ப போதுமானதல்ல. சில தொலைக்காட்சி அலைவரிசைகளில் தமிழே இல்லை. இதனை இரண்டு தமிழ்த்திரைப்படங்களை ஒளிபரப்புவதன் மூலம் குறைக்கலாம் எனவும் எதிர்பார்க்கின்றோம், எனக் கூறப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசு இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களுடைய பிரச்சினைகளை பிரதிபலிக்கும் படைப்புக்களுக்கு– ஆக்கங்களுக்கு இடங்கொடுக்காது மலினம்மிகு இந்தியத் திரைப்படங்களைக் கொண்டு தொலைக்காட்சியை நடாத்துவதன் மூலம் தமிழர்களைத் திசைதிருப்பலாம் என கனவு காணுகின்றது.

## தனிநாடு ஒருபோதும் வழங்கப்படமாட்டாது

**- கதிர்காமர் சொல்கிறார்**

"தமிழர்களுக்கு ஒருபோதும் தனிநாடு வழங்கப்படமாட்டாது. ஆனால் இயலுமான வரை அதிகாரப் பரவலாக்கலை அரசு மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றது." இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மேற்கொள்ளப்படும் அதிகாரப்பகிர்வு பற்றி அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிக பாதுகாப்பு நிதி போர் நீடிக்கவா?

மட்டு. பாராளுமன்ற உறுப்பினர் சபையில் கேள்வி

கடந்த ஆண்டு 2300 கோடி ரூபா பாதுகாப்பு செலவுக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டு அத்தொகை 100 கோடி 70 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. ஒருபுறம் சமாதானம் பேசப்படுகிறது. மறுபுறம் பாதுகாப்புக்கு அதிக தொகை ஒதுக்கப்படுகிறது. அவ்வாறாயின் போரை நீடிக்கப் போகிறீர்களா? இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வரவு செலவுத்திட்டம் மீது பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அமெரிக்கப் பணியாளர் மக்களால் தாக்கப்பட்டார்

அமெரிக்கத் தூதரகம் ஆட்சேபம்

இரணவிலவில் அமைக்கப்பட்டுவரும் வொய்ஸ் ஓவ் அமெரிக்கா வானொலி அஞ்சல் நிலையத்தில் பணியாற்றும் அமெரிக்கர் ஒருவர் அப்பகுதி மக்களால் தாக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில், அமைதியான வழியில் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட அனுமதிக்கப்பட்டவேளையில், இவ்வகையான சட்டவிரோதமான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்வது கண்டனத்துக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வானொலி அஞ்சல் நிலைய கட்டட அமைப்பு வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்களை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவரும், வானொலி அஞ்சல் நிலைய காவலாளர்களும், எரிபொருள் விநியோகம் செய்யும் வாகன சாரதிகளும் குறிப்பிட்ட சிலரால் கொலைப்பயமுறுத்தலுக்கு ஆளாகியிருப்பதாகவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## தமிழ் தேசத்தை சந்திரிகா அங்கீகரித்துள்ளாரா?

*—பேரினவாத செய்தித்தாள்கேள்வி*

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ரூபவாகினிக்கு அளித்த செவ்வியில், போர் நிறுத்தப்படல் வேண்டும் என்பதே எமது மக்களினதும் வடக்கு–கிழக்கு மக்களினதும் அபிலாசை எனத் தெரிவித்துள்ளார். இதில் எமது மக்கள் என சிங்கள மக்களையும், வடக்கு–கிழக்கு மக்கள் என தமிழீழ மக்களையும் இரு வேறாக அவர் பிரித்துள்ளார். அதாவது இரு தேச மக்கள் என்பதை இதன் மூலம் அவர் ஏற்றுள்ளார். இதன் அடிப்படையில் தமிழீழத் தேசத்தை சிங்களத் தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் அரசியல் சாசனம் வகுக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு கெலகுரு என்ற சிங்களச் செய்தித்தாள் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அச்செய்தித்தாளில், திருமதி சந்திரிகா ரைம்ஸ் செய்தித்தாள் செய்தியாளர் அனித்தா பிரதாப்பிற்கு அளித்த செவ்வியில், அரசியல் தீர்வு என்பது வெறும் அரசியல் அமைப்பையும்–சட்ட உரிமைகளையும் மட்டுமல்ல, உண்மையான அதிகாரப் பகிர்வே எனத் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கிறாரா? எனவும் அச்செய்தித்தாள் கேள்வி எழுப்பியுள்ளது.

## இராணுவ ஆட்சேர்ப்பில் 20 நிலையங்கள் தீவிரம்

வடக்கு – கிழக்கு இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக அரசு விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம், சமாதானப் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருக்கும் வேளையில், இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதில் அதிக கவனம் செலுத்திவருகின்றது என செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய கொழும்பு, பனாகொடை, அனுராதபுரம், கண்டி, மொனராகலை, காலி, மாத்தளை, இன்னுருவ, தியத்தலாவ, நுவரெலியா, திருகோணமலை, கேகாலை, அம்பாறை, இரத்தினபுரி, கம்பகா, வவுனியா, மணலாறு, மாத்தறை போன்ற இருபது இராணுவ முகாம்களில் கடந்த மாதம் முதல் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.



# உளத்தில்..

# இலக்கு நோக்கிய இலக்கியம்

நாயன்மார்கட்டு
சிவகுமாரன்

## உளமும் களமும்

வணக்கம்.
போர் தமிழர்க்குப் புதிதல்ல.
போரின் இன்னல்கள் இனிதல்லவெனிலும் போரை வரித்து போருக்கென்று
இலக்கணம் வகுத்து, போரிற்கென்று இலக்கியம் படைத்ததும் நமது தமிழ்ச் சமுதாயம்தான்.
போரிலே பிறந்து போரிலே மடிந்தவர்கள் ஆயிரம் உண்டு எம் அகராதியில்
களமே எமக்கு களமாயிருந்திருக்கிறது எம் வரலாற்றில்,
போரன்று தமிழர் வாழ்வின் சங்கமம், சங்கம்முதல் இன்றுவரை வேண்டுமெனில்
இடைவெளிகள் இருந்திருக்குமே தவிர. போரில்லாக் காலம் இல்லை.
புறம் என்று வீரத்திற்கு வாகை சூடியதும் எமது தமிழ்
வாகை மட்டுமா.
வெட்சியென்றும். தும்பை யென்றும். உழிஞை பென்றும். வஞ்சியென்னும் வாகை யென்றும் வாகை சூடிய தன்றோ இந்தத் தமிழ்
இப்படி போரைப் போற்றியதால் தமிழ் வன்மையாய் இருந்ததாய் அர்த்தமில்லை
அது காதலையும் போற்றியதைக் கற்றோர் அறிவர்.
காதலும் வீரமும் அதன் இருகண்கள்.
அதனாற்றான் சங்ககால இலக்கியப் பண்புகள் எனும்போது காதலும் வீரமும் என்று கற்றுணர்ந்தோர் சொல்லுவர்.
சங்கத்து நூல்களைத் தரம் பிரித்தால் காதல், வீரம் என்று இரண்டாகத் தரம் பிரியும்.
களத்தில் நின்றதால் தமிழ்,
உளத்தைத் தொலைத்து விடவில்லை.
இது தமிழ் காட்டிய வாழ்வின் பாங்கு.
வல்லினத்துக்கு ஆறு எழுத்துக்களைக் கொண்ட அதேவேளை தமிழ் மெல்லினத்துக்கும் ஆறு எழுத்துக்களைக் கொண்டது.
அதனாற்றான் தமிழ், மொழி மட்டுமல்ல, வாழ்வும் என்றாகிறது.
களமாடும் ஒருவன் காட்டுமிராண்டிபோல இருப்பான் என்றும் அறியாதார் அறிவர்.
களத்தைக் கலையாக்கி, அதை உயிர்வாழ்வின் தேவையன்று கையாண்டது தமிழ்.
*களமறியார் நெஞ்சு, களமறிந்தோர் நெஞ்சை அறிவதில்லை.*
*களமறிந்தோர் நெஞ்சோ, களமறியார் நெஞ்சையும் அறிந்துவிடும்.*
களமறியா நெஞ்சுகளே! வாருங்கள்.
களத்தில் நின்ற உளங்களைப் பிளந்து பார்ப்போம்.
அப்போது...
இலக்கியம் ஓர் இலக்கு நோக்கி நிற்பது புரியும்.

அதோ வருகிறான் கடையேழு வள்ளல்களில் ஒருவன்
பாரி...
பறம்பு நாட்டின் சிங்கம். படைபல வென்று, தடைபல தாண்டித் தன் சாம்ராச்சியத்தை நிறுவிக்கொண்டவன்.
அந்நாளில் மன்னன் எனப்படுவோனின் ஸ்தானம், விழுகின்ற வாக்குகளால் நிர்ணயிக்கப்படவில்லை. விழுகின்ற தலைகளால்தான் நிர்ணயிக்கப்பட்டது.
அந்நாளில் மன்னர்களின் பெரும்பாலான நாட்கள் களத்திலோ, அன்றி களம் பற்றிய சிந்தனையிலோதான் கழிந்தது.
அத்தகையதோர் மன்னன்தான் பாரி.
பாரி தன் ஸதானத்தைத் தக்கவைக்க, எத்தனை பேருடைய தலைகளைத் தறித்திருப்பான்.
தன்நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பதற்காக எத்தனை சிரங்களைச் சீவியிருப்பான்.
தன் மக்களை மாற்றானிடமிருந்து காக்க, எத்தனை உடல்களை வீழ்த்தியிருப்பான்
சற்றுச் சிந்தியுங்கள்.
அதே போர்க் களம் கண்ட பாரிதான் முல்லைக்கொடியொன்று காற்றில் அலையுண்டு கிடக்கையிலே காணச்சகியாது தன் தேரினைவிட்டிறங்கி அத் தேரினையே முல்லைக்கு ஈந்து அம் முல்லையினை அத்தேரினிலேயே படரவிட்டு அவ்விடம் விட்டுச்சென்றவனன்றோ!
இவ்விலக்கிய நிகழ்ச்சி சொல்லும் செய்தி என்ன? களம்பல கண்டும் உளம்மாறா உன்னத மனிதர்களையன்றோ எமது இலக்கியம் காட்டி நின்றது.
இரத்தச் சேற்றிலே உருண்டவர்கள், மனித உடல்நடுவே புரண்டவர்கள், அதைத் தம் கடமையாகக் கொண்டார்களே தம்மனதை அதன் மூலம் பாதிப்படையவிடவில்லை.
போர் கடமையாக இருந்தது. அவர்கள் விரும்பியேற்ற உடமையாகவில்லை.
இலக்கியம் இயம்பிய களமது
இன்று புலிகள் இயற்றிடும் களங்கண்டீரா?
1983...........
குருளையாய் இருந்த புலி குகைவிட்டுவெளியே வந்து உறுமத்தொடங்கிய நேரம்.
அரச படைகள் அழிச்சாட்டியமடக்கி துரத்தியடிக்க முனைந்த நேரம்.
எண்ணிக்கையில் அதிகப்படாமல் எண்ணங்களில் அதிகப்பட்டுப் போராட்டம் செறிவுபட்ட நேரம்.
அந்தப் புலிகளின் அங்கத்தினன் அவன்.
ஒருதட்டிலே உண்டு, ஊரெல்லாம் உருண்டு, ஊரையே உருட்டியடித்த நண்பர்கள் அவர்கள்.
ஆம் அவன் எனது நண்பன்.
அன்று....
தீபாவளித் திருநாள். காலை திருநாளாகவே விடிந்தது. தீபாவளிக்குரிய அல்லோலகல்லோலத்துடன் கோவிலுக்குச் செல்வதற்காக குடும்பத்தினருடன் புறப்பட ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றேன்.
திடீரென்று அந்த சீ—90 இரைந்துகொண்டு உள்நுழைந்தது. அந்தக்காலத்தில் சீ—90 தான் புலிகளின் கவச வாகனம்.
அவன் அந்தச் சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்தான் என்பதைவிட அந்த சைக்கிள் அவனை ஓடட்டிவந்தது என்பது சாலப்பொருத்தம்.
இது அவனது மெலிந்த உருவத்திற்கு ஊரார் கொடுக்கும் உவமை.
ஓடிவந்தவன் வலு நிதானமாக சைக்கிளை நிறுத்திவிட்டு என்னைச் சைகை காட்டிக் கூப்பிட்டான்.
அவனது உடுப்பெங்கும் ஒரே இரத்தம்.
அடடே காயப்பட்டுவிட்டானோ? மனது துடிக்க அவனை நோக்கி ஓடுகிறேன்.
"மச்சான் ஒரு உடுப்பு எடுத்துக்கொண்டு கிணத்தடிக்கு வாடா" என் பதிலை எதிர்பாராமலே அவன் கிணற்றடி நோக்கிச் செல்கிறான்.
அருகிலிருந்த சாரம் ஒன்றை உருவியபடி "என்ன மச்சான்? என்ன நடந்தது?" என்று கேட்டபடி பின்னால் ஓடினேன்!
"ஒண்டுஞ் செய்யேலாது மச்சான் இண்டைக்குத்தான் உண்மையான நரகாசுர வதம" —இது அவன்
"என்னடா? சொல்லுறாய்.... என்ன நடந்தது?"
"நானொண்டும் செய்ய ஏலாது இயக்க முடிவடா! அது இண்டைக்கு நடக்கக் கூடாது எண்டுதான் நானும் நினைச்சனான்... தவிர்க்க ஏலாமாய்ப்போச்சு. கனநாளாய் இதுக்கெண்டே திரியிறன், அவனுக்கும் விளங்கிப் போச்சு! அவன் தீபாவளி எண்டிட்டுத்தான் துணிவாய் வெளியில வந்தவன். என்ன செய்யிறது? கடமைதானே முக்கியம்" நடந்ததை விபரித்தான்.
போராட்டத்தின் சூழலைப் பயன்படுத்திப் பல துரோகி கள் உருவாகி இருந்த நேரத்தில் அவர்களையும் அழித்தொழிக்க வேண்டிய கட்டாயக் கடன் அப்போதைய புலிகளுக்கு இருந்தது.
அத்தகைய துரோகி ஒருவனைச் சுட்டுக்

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்...



# உளத்தில்..

# அழியுங்

# கலை

எழுத்து

அம்மாவுக்குக் கடிதம்!
அப்பாவுக்குக் கடிதம்!
அண்ணாவுக்குக் கடிதம்!
அக்காவுக்குக் கடிதம்!
கணவனுக்குக் கடிதம்!
மனைவிக்குக் கடிதம்!
காதலனுக்கும் காதலிக்கும் அதே கடிதம்!

என்று வியாபித்து நின்ற கடிதக்கலை குன்றிக் குறுகிக் கொண்டு செல்கிறது.
பேனா, வங்கிக் கணக்கோடு வணக்கம் கூறி விடைபெற்றுக்கொள்கிறது. இன்றெல்லாம் கடிதமெழுதுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.
இருந்து எழுதவும் எண்ணங்களைக் கொட்டுவதற்கும் நேரம் இருக்கிறதா? என்று கூறித் தப்பிக் கொள்ளுகிறோம்.
எழுத இருந்தாலும் எதையெழுதுவதென்று தெரியாதஓரிருள் வந்து சூழ்ந்துவிடும் நிலைமையும் உருவாகிவிடுகிறது!
எழுத்தோட்டம் என்பது மருந்துக்கும் இல்லாமல் மறைந்து கொண்டு போகிறது
கடிதத்தைத் தொலைபேசி ஓட ஓடத் துரத்திக்கொண்டிருக்கிறது!
தொலைவில் இருப்பவர்களை மட்டுமன்றி அருகில் இருப்பவர்களையும் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசித் தொலைப்பவர்கள் நம்மிடையே ஏக்கச்சக்கம்!
முகம் பார்த்துப் பேசும் பழக்கத்தையும் தொலைபேசி பதம்பார்த்துக் கொண்டிருக்கிறது!
காதல் நெஞ்சுகள் கூடக் கடிதக் கலையைப் புறக்கணித்து விடுகின்றன!
கடிதக்காரனை எதிர்பார்த்துக் காத்துக்கிடந்த காதல் வாழ்வும் கப்பலேறி விட்டது.
கடித எதிர்பார்ப்புகளை தொலைபேசி மணியோசை இடம் பெயர்த்து விட்டது
தொலைபேசிக் காதல்களே இலக்கியங்களையும் திரைப்படத் திரைகளையும் மூடிக்கொண்டுள்ளன.
குரலில் உணர்வுகளைப் பரிமாறுங்கலை அழிந்து கொண்டு செல்கிறது.
கையெழுத்தின் ரேகைகள் தேய்ந்து கொண்டு செல்கின்றன.
காற்றோடு போகும் வார்த்தைகளும் வாக்குறுதிகளும் காவியக் காதல்களை நட்டாற்றில் விட்டுவிடுகின்றன.
நானா சொன்னேன் அப்படியா சொன்னேன்?
இருக்காது! அப்படியெதுவும் இருக்காது!
நான் கருதியது வேறு
என்ற வார்த்தை மாற்றுக்கள் வளம் பெற்று வருகின்றன!
எழுத்துக்களே உணர்ச்சியை நெறிப்படுத்த வல்லன!
உறவுக்கு வரையறை வகுப்பன!
எமது உறவுகளின் பதிவேடுகளாகின்றன!
எமது உணர்வுகளின் நிரந்தர இல்லங்களாகி நிலைக்கின்றன!
நாம் நேற்றுச் சொன்னதை .. இன்றும் பிரதிபலிக்கின்றன

இன்றெல்லாம் தொடர்ச்சியாக நான்கு வரிகளை எழுதுவோரைச் சந்திப்பது கூட அருகிவருகிறது!
வாசிப்புக்கலையும் வற்றிக்கொண்டு செல்கிறது!
சிறுகதையும் நாவலும் காலக்கம்பிக்குப் பின்னால் சிறைப்பட்டுவிட்டன. வாசிக்க நேரமிருந்தாற்றானே? என்கிறார்கள் சிலர்



எழுத்து இலக்கியம் அரங்கியலில் அவைக்காற்றும் படைப்புகளோடு மட்டும் நின்றுவிடுமோ என்ற அச்சமும் எழத் தொடங்குகிறது!
இங்கு கூடப் புதுமையெனும் பெயரில் எழுத்துக்குப் புதைகுழி தோண்டுபவர்கள் வளர்ந்து வருகிறார்கள்.
இயல் இசை நாடகம் என்ற முத்தமிழுக்கும் அடித்தளமானது எழுத்து.
அவற்றின் ஆணிவேராக நின்று மக்களின் உள்ளக் களங்களில் உணர்ச்சி வெள்ளத்தை உருவாக்கும் உன்னதக் கலையே எழுத்துக்கலை.
ஆத்ம ஞானத்தை ஊட்டும் பெருங்கலையும் இதுவே.

நவீன நாடகப் படைப்புகளில் ஒலியும் ஒளியு
அத்துமீறிப் புகுந்து, ஆர்ப்பாட்டம் செய்து
வளமான வார்த்தைகளை வசனங்களை
வடிகட்டியெறிந்து விடுகின்றன.
மேலைத்தேய அரங்குகளில் தமிழ்
வசனகர்த்தாக்களின் வாய்விலங்குகள் விற்பனை
யாகின்றன. எழுத வராதவர்கள் எழுத்து வேண்
டாம் என்று கருத்து வெளியிட
தொடங்கு கிறார்கள்.
கைகளே போதும் சத்தமே போதும்
என்றும்
பக்கம் பிடிக்கிறார்கள் சி
சாதனைவீரர்கள்.
ஆக்கப் படைப்புகளில் எழுதுபவ
வெறும் கற்பனாவாதியென்றும்
ஒரு சிந்தனை பரப்பப்பட்டு
வருகின்றது.
இது நமது நெஞ்சை வருத்தும்
சிந்தனையாகும்.
கட்டவிழ்த்து விடப்பட்ட
கற்பனையை யதார்த்தத்திற்கு
கொண்டு வருவதல்ல இலக்கியம்.
யதார்த்தத்தை உலக சமுதாயத்தி

மேன்மைநோக்கி பொறுப்பு ணர்வுடன், கற்பனை
கலசத்தில் மொழியழகு ததும்ப ஏந்திவருவதே
பண்பட்ட இலக்கியமாகும்.
தனிமனித நிகழ்வுகளை இந்த நிகழ்வுகளின்
பின்னணியிலான தார்மீக நீதி நியாயங்களை
சமுதாய சட்ட திட்டங்களைப் பொதுமைப்படுத்த
உலகின் பார்வையிற் பதிவு செய்யும்
கடமையையே ஓர் உண்மையுள்ள எழுத்தாளன்
புரிய முயல்கிறான்.
சுயநலப் போர்வைக்குள் சுற்றப்பட்டு, தனது
சொந்த உறவுகளுடன் தன்னைச் சங்கமாக்க
நினைக்கும் ஓற்றையுள்ளத்தையும், பிறருக்காகக
கசிய வைக்கும் கைங்கரியத்தைச் செய்பவனே
எழுத்தாளனாகிறான்.
உலகத்துக்காக அழவும் சிரிக்கவும் வைக்கும்
கலையே எழுத்துகலையாகும்.
நமது உள்ளங்களைப் புடம் போட்டு, உணர்வு
களைப் பூக்க வைத்து, உலக சமுதாயத்துடன்
ஒருங்கிணைய வைக்கும் ஒப்பற்ற பணியையே
ஓர் எழுத்தாளன் செய்ய வேண்டும் என்பது எனது
ஒருமையான அபிப்பிராயமாகும்.
தெய்வம், தேசம், தேசியம், உலகம் என்ற படிகளி
எம்மை வழிகாட்டும் ஆத்மவாதியாகவே ஓர்
எழுத்தாளன் பரிணாமம் அடைதல் வேண்டும்.
குறிப்பாகப் புலம் பெயர்ந்த நிலங்களில் தாய
மொழிப்பயிற்சி அத்தியாவசியமான ஒன்றாகும்.
எமது தாய்மண்ணிலுள்ள எமது
உறவுகளுடனும் மற்றும் உலகின் பல்வேறு
பாகங்களிலுள்ள தமிழ் மக்களுடனும் எழுத்துத
தொடர்பினைப் பேணுதல் எமக்கும் எமது
எதிர்கால சந்ததியினர்க்கும் பயனளிக்கக் கூடிய ஒரு
கடமையாகும்.
எமது வாழ்க்கை முறைகளை, ஆத்ம
இயல்புகளை
நமது குழந்தை
களுக்கு நாம்
உணர்த்துவதற்கு
நமக்கு எழுத்

புலவர் சிவநாதன்

இலக்கிய ஈடுபாடு அவசியமாக இருக்கிறது.
எமது தமிழிசையை பொறுத்தவரையில் கூட வார்த்தைகளில்லா வாத்திய இசையும் வளர்ச்சிக்கு வித்திடுமென நான் நம்பவில்லை.
எமது குழந்தை கள் புலம் பெயர்ந்த நிலங் களில் ஒரு விஞ்ஞான வலயத்திற்குள் வட்டமிடும் விஞ்ஞான விலங்குகளாக வாழ்ந்து கொண்டி ருப்பது ஒரு கசப்பான உண்மையாகும். மனிதநேயத்தையும் மக்களுணர்வையும் பதிர்ந்து கொள்ள வாய்ப்பற்றவர்களாக ஆத்ம வெளிப் பாடற்றவர்களாக, அவர்கள் ஓர் இயந்திர வளர்ச்சிக்குள் இணைந்து நிற்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது.
உணர்வு வெளிப்பற்ற, உள்ள விழிப்பற்ற, ஊடகங்களாக நமது குழந்தைகள் உலவுவதை நாம் கண்டும் வாளாவிருக்கும் நிலைமையுள்ளது. இதன் பயங்கர விளைவுக்கு நாமெல்லோரும் பாத்திரவாளிகளாகியே தீரவேண்டியிருக்கும்!
எம்மை நாம், எமது குழந்தைகளுக்கு வெளி ப்படுத்தமுடியாத நிலைமை வளருமாயின் நாமும், அவர்களை நட்டாற்றில் விட்டவர்களாவோம். அறிவுலக அலைகளின் நடுவே ஆத்ம உளப்பலமற்றவர்களாக அவர்கள் சீரழியும் நிலைக்கு அவர்களைத் தள்ளிய வர்களாவோம்.

# கேள்

எமது தாய்மொழியிலேயே நாம் நம்மைச் சரியாக வெளிப்படுத்த முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. மேலைத்தேய மொழிவளம் எம்மை நாம் வெளிப்படுத்த உதவுமென நான் பூரணமாக நம்பவில்லை.
நம்மை நாம் வெளிப்படுத்துவதற்கு எமது தாய்மொழியில் எழுதுவதும் வாசிப்பதும் அத்தியாவசியமாகிறது.
நாமே நம்மைத் தெளிவாக வெளிப்படுத்தத் தயங்கும் நிலையுள்ள பொழுது, நமது பிள்ளைகளிடம் வெளிப்பாட்டியல்பினை வளர்த்திட முடியாது.
குறிப்பாகத் தெய்வ சம்பந்தமான விபரங்களை விளங்கிக் கொள்வதற்கும் விளங்கியதை வெளிப்படுத்துவதற்கும் நமது எழுத்திலக்கிய ஈடுபாடு அவசியமாகும்.
"சொல்லற்கரியான்" என்றும் "உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்" என்றும் எமது தமிழ் மறைப்பெருமக்களே தெய்வசங்கதிகளைப் பேச வரும் போது திகைத்திருக்கிறார்கள் ஆயின் நாம் எப்படி எம்மை வெளிப்படுத்தப் போகிறோம் என்ற மலைப்பு நமக்கு வரவேண்டும்மல்லவா?
எமது தாய் மொழியில் எழுதுவதும் வாசிப்ப தும் நாம் கைவிடக்கூடாத மனிதநேயக் கலை யென்பது மட்டுமன்றி, சிந்தனாவளர்ச்சிக்குச் செழிப்பூட்டும் சத்துண வென்பதும் எனது தாழ்மையான கருத்தாகும்.
அறிவியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆத்மவியல் ரீதியாகவும் எம்மை வளர்க்கும் இக்கலைக்கென நாம் வாரத்தில் ஓரிரு மணித்தி யாலங்களையாவது பயன்படுத்துதல் அவசியமாகும்.
தூரத்திலுள்ள நட்புறவுகளைப் பலப்படுத்தி, ஒரு நம்பிக்கையான எதிர்காலத்தைநோக்கி நம்மை வழி நடத்தக் கூடிய ஒரு பண்பாட்டிலக்கியமாகவும் நாம் எழுத்தினை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது குறைந்த பணச்செலவில் நம்மை ஆழமாக இணைத்து வைக்கக் கூடிய ஒரு பாரிய சாதனமாக எழுத்துக் கலையை நாம் போற்றிப் பாதுகாத்தல் வேண்டு மென்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

## இலக்கு நோக்கிய...

கொல்லமுயன்றபோது. இவன் இலக்கு வைக்க அவன் திடீரென இவன் மீதே பாய, போராடி இறுதியில் அவனைச்சுடடதன் பின் நடந்ததேயது. இடுப்பினூடாகத் துப்பாக்கியை எடுத்து நான் நீரூ ற்ற அவன் கழுவுகிறான்! முகத்தில் எந்தச் சலன மும் இல்லை! உடைகளை அலசுகிறான். வாய்க் காலினூடு நீர் சிவப்பாய் ஓடுகிறது!
"எப்படியடா முடிகிறது? ஒரு தீபாவளி நன்நாளில் .... உங்கள் மனதெல்லாம் மரத்துவிட்டதா?"
ஒன்றும் பேசாமல், ஒன்றும் காட்டிக் கொள்ளாமல் உடல் கழுவி கொடுத்த சாரத்தைக் கட்டிக்கொண்டு வந்த சுவடு தெரியாமல் போய்விடுகிறான்.
மனசு கனத்துப் போய்விடுகிறது. சே... என்ன மனிதர்கள்!
இவர்களுக்கெல்லாம் நல்லநாள் தீயநாள் என்பதே கிடையாதா? மனசு வெறுத்துப் போய்விடுகிறது. விபரம் விசாரித்த வீட்டாரிற்கு எதுவோ கூறிச் சமாளித்து, வெறுத்த மனதுக்கு நிம்மதிக்காக குடும்பத்தாருடன் கிராமத்து எமது குலதெய்வம் அம்பாள் கோவிலுக்குப் போகின்றேன்.
தீபாவளியல்லவோ கோவிலில் கூட்டம். இப்போ கோவிலை நெருங்கிவிட்டேன்.
கூட்டத்தின் மத்தியில் ஓர் உருவம் வலு நிதானமாக மெய்மறந்து கும்பிட்டுக் கெண்டு நிற்கிறது. அருகு சென்றதும் அடையாளம் காண்கின்றேன். மெய்விதிர்க்கஉடல்லேசாக நடுங்க, கண்களிலிருந்து கண்ணீர்ஆறாக ஓட அம்பா ளைநோக்கி அந்த உருவம் கும்பிட்டுக்கொண்டு நிற்கிறது.
ஆம்..... அவனேதான்.
அடடே..... புரிகிறது! நண்பனே நன்கு புரிகிறது!!
ஓகோ... அது களம்.
இது உளம்.

(தொடரும்.......)

# கிணற்றடி மண்

நமது தாய்நிலத்தின் தேவை ஒன்றிற்காக மேற்கு இலண்டனிலுள்ள அந்த வீட்டிற்கும் சென்றிருந்தோம்.
அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்த பெரியவர் ஒருவர் எம்மை வரவேற்றார்.
நாட்டின் தற்போதைய நிலைமைகளைப்பற்றி அக்கறையோடு கலந்துரையாடிய அவர், தனது தொழிலிருந்து ஓய்வுபெற்றிருந்த நிலையிலும் நாங்கள் அவரை அணுகிய நோக்கத்திற்காகக் கணிசமான பங்களிப்பைச் செய்தார்.
இடையில்.......
அந்த இருக்கை அறையின் மூலையில்...... ஒரு சாடியுள்ளே கணிசமான அளவு வளர்ந்து ஒரு செடி நின்றதைக் கவனித்தேன்.
"ஐயா கமுகஞ் செடிபோல கிடக்கு"?........
"ஓம்... ஓம்... ஆனா அது சாதாரண கமுகு இல்லைத்தம்பி, இது ஊரில........ எங்கடை முத்தத்தில நிண்ட கமுகு."
முற்றத்தில் என்பதை நன்கு அழுத்தியே சொன்னார்.
"கடைசியாக ஊருக்குப் போய் வந்தபோது கொண்டுவந்தனான்."இருக்கையிலிருந்து எழுந்து சென்ற அவர், அந்தக் கமுகைத் தாங்கி நின்ற சாடியின் அருகில் சென்று குனிந்து உள்ளேயிருந்த மண்ணைக் கையிலெடுத்து முத்தமிட்டுக் கொண்டார்.
"தம்பிமாரே, இது எங்கட வீட்டுக் கிணத்தடி மண் தம்பி...... எங்கட மண்.... நான் 59ம் ஆண்டு இங்க வந்தனான். பிள்ளைகளுக்காக தொடர்ந்தும் இங்க வாழவேண்டியிருக்குது. என்ன இருந்தாலும் என்ர மண்ணிலதான் நான் கண்மூட வேண்டும்." அவர்கண்கள் பனித்தன.
இப்படியும் நெஞ்சுகள்.....

இறைகுமாரன்

# வரலாறுதன்னை மீட்கும்..

அந்தமில் தமிழே எங்கள்
ஆவியே தாயே உந்தன்
முந்தைய பெருமை எங்கே
முத்தமிழ்த் திருநா டெங்கே
கங்கைகொள் வீரம் எங்கே
கடாரமின் றெங்கு தாயே
சிந்தையில் இவற்றை யெண்ணா
சிறுமையுள் வாழ்ந்தோம் வீணர்.
முந்தையோர் நாட்டி லெங்கள்
முதுசமாம் வீரம் இன்றி
சிந்தையில் செயல் அகற்றி
சிறப் பெலாம் இழந்து நிற்கும்
விந்தையை நினைத்தாற் பாரில்
வேதனை முகிழ்த் தெழுந்து
தந்தையர் நாட்டின் சேதி
தணலினைக் கொட்டி த்தூவும்.
விந்தைகள் எங்கேயென்று
விரிந்த இவ்வுலகில் பார்க்கும்
சிந்தனை கொண்டோர் கூட
குறித்திட மறுத்த தாலே
சிந்திக்க வைத்தார் அந்தச்
சிறுத்தைகள் என்றே பேச
இங்கிதம் நிறைந்த நாடு
தமிழீழம் ஒன்றே கேளீர்.
சந்தமுத் தமிழை நாளும்
சாற்றி நீ வாழ்ந்த போதும்
சிந்தனை தன்னைச் சற்று
திருப்பி நீ பாராய் இங்கு
வந்திடு பகையை வெல்ல
ஈகத்தால் அரண்கள் செய்யும்
சந்ததி வாழும் நாளை
சரித்திரம் படைக்கும் பாரீர்.
வங்கமா கடலின் ஓரம்
வளர் தமிழ் நாடொன்றுண்டு
சங்கமுத் தமிழும் நாட்டின்
சரித்திரம் யாவும் மீட்கும்
சிந்தையில் உயர்ந்த கூட்டம்
சிறுத்தைகள் என்று பாடி
வந்தனை செய்து நிற்கும்
வரலாறு தன்னை மீட்கும்.

-வளவை வளவன்

வாசகர் கவனத்திற்கு: தொடராக வெளியிடப்படும் **அரசியலமைப்பு** அரசியற் கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்




எங்குபார்த்தாலும் இதே செய்திதான் . எல்லோர் வாயிலும் அதே பேச்சுத்தான்.

செல்வமணியின் கலியாணம் திடீரெண்டு குழம்பிப் போச்சுதாம். யாரும் சிறிதும் எதிர்பார்த்திராத செய்தி என்பது அவர்களுடைய குரலிலேயே தெரிந்தது. மனவருத்தமும் ஏமாற்றமும் அதிற் கலந்திருந்தன.

செல்வமணியும் அதே கிராமத்தைச் சேர்ந்தவள்தான். ஆனால் சற்று வித்தியாசமானவள். மாணவியாக இருந்த காலத்திலேயே அவள் எல்லோருக்கும் தெரிந்த ஒருத்தியாகிவிட்டாள்.

படிப்பிற் கெட்டிக்காரி. பேச்சு, நடிப்பு, விளையாட்டு போன்றவற்றில் ஈடுபாடும் திறமையும் இருந்தன. நாட்டிலுள்ள பாடசாலைகளுள் ஒன்று என்பதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியாதபடி கிடந்த அந்தக் கிராமத்துப் பாடசாலை. இத்துறைகளிற் தொடர்ந்து சில ஆண்டுகளாகப் பரிசுகளும் பாராட்டுக்களும் பெறுவதற்கு அவளே மூலகாரணமாக இருந்தாள். தனது பங்கைச் சரியாக நிறைவேற்றுவதுடன் அமையாமல் சிறிது திறமையுடைய ஏனைய மாணவர்களுக்கும் உற்சாகமூட்டிப் பயிற்சியளித்து அவர்கள் வெற்றியீட்ட வழிவகுத்தும் வந்தாள்.

சாதாரண தரப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் ஒரே தடவையிற் சித்தியடைந்த முதல் மாணவியும் செல்வமணிதான். அந்தப் பாடசாலையைப் பொறுத்தவரை அது ஒரு சாதனை.

தொடர்ந்து மேலே படிப்பதற்கு அவளால் முடியவில்லை. அந்தப் பாடசாலையில் உயர்தர வகுப்பு இல்லை. தொலைவிலுள்ள நகரத்துப் பாடசாலைக்குச் செல்வதற்கு அவளுடைய பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை. யாரிடமாவது கடன் எடுத்து மகளைப் படிப்பிக்கக்கூடிய வல்லமை தகப்பன் செல்லையாவுக்கு இல்லை மண்ணையும் மாட்டையும் நம்பி ஏதோ ஒருவிதமாக வயிறு வளர்க்கும் அவரை நம்பிக் கடன் கொடுப்பதற்கு யாரும் முன்வரவும் இல்லை.

அவளுக்கு மனவருத்தந்தான். யாரைக்குறை சொல்வது என்று தெரியாமல் தன் கவலையை மறக்க அவள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஆனால் அவள் வீட்டிற்குள் முடங்கிக் கிடந்தது சில நாட்கள் மட்டுமே. அவளிடம் பாடம்கேட்டுப் படிப்பதற்குச் சுற்று வட்டாரத்திலுள்ள சிறுவர்கள் அவளை நாடத் தொடங்கியதும் அவள் கவலையெல்லாம் பறந்து விட்டது.

பாடசாலைக்கு அண்மையில் வாசிகசாலை என்ற பெயரில் கருக்கட்டி வேலையற்ற சிலரின் வம்பளக்கும் இடைமாதக்குறைப் பிரசவமாகியிருந்த கொட்டிலை அவள் புதுப்பித்தாள் இரவு வேளைகளில் பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் அந்தச்சிறுவர்கள் அங்கே படிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தாள்.

வேலைகள் குறைந்த மாலை வேளைகளில் ஊரார்கள் ஒன்றுகூடும் மத்திய நிலையமாகவும் அது விளங்கியது. பத்திரிகைகளில் வெளியாகும் புதினங்களைச் செல்வமணி உரத்து வாசிக்க மற்றையோர் கேட்பது வழக்கமாயிற்று. இடைக்கிடை அவள் ஏற்பாடு செய்த சொற்பொழிவுகளும் கலந்துரையாடல்களும் அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்தன. சுகாதாரக் குறைவான பழக்கங்களைக் கைவிட்டுச் சுத்தமான முறைகளை மேற்கொள்வதற்கும் விவசாயத்தில் சில புதிய வழிகளைப் பின்பற்றுவதற்கும் அவை தூண்டின. போர்க்காலக் கருத்தரங்குகள் புதிய பல உண்மைகளை உணர்த்தி விழிப்புணர்வை ஏற்படுத்தின.

அரச வன்செயல்களால் சொந்த வீடு வாசல்களையும் உற்றார், உறவினர்களையம்அநியாயமாகப் பறிகொடுத்துவிட்டு அகதிகளாகப் பலர் அந்தக் கிராமத்திற்கு வந்தனர்.

அவர்களுக்குத் தற்காலிகவாழ்விடங்களை அமைப்பதில் தேவையான பொருள்களைச் சேகரிப்பதில் அவள் முன் நின்றாள்.

நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவையளுக்குக் குடுக்க எங்களிட்டஎன்ன கிடக்குது? என முணமுணுத்தவர்களுமுண்டு.

அவையளுக்கு மாடமாளிகையள் தேவையில்லை... எங்களாலை முடிந்ததைச் செய்வம். அது எங்கடை கடமை நாளைக்கு இத மாதிரி ஒரு நிலை எங்களுக்கும் வரும் எண்டதையும் நினைச்சுப் பார்க்கவேணும் செல்வமணியின்விளக்கம் முணு முணுப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

அகதிகளுக்கும் மற்றவர்களுக் கும்நிவாரணம்பெ ற்றுக்கொடுப் பதில் இடையிலே புகுந்து விளையாடும் பெருச் சாளிகளைக் கண் காணிப்பதில் செல்வ மணியின் பங்கு பெரிதாக இருந்தது.

அவள் இல்லாவிட்டால் அந்தக் கிராமத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் என்று சொல்லுமளவிற்கு இன்றியமையாத ஒருத்தியாக அவள் ஆகியிருந்தாள்.

இப்படி நல்ல சேவைகளைச் செய்துஒவ்வொரு வருக்கும் வேண்டியவளாகி விட்ட அவளின் கல்யாணம் ஏன் குழம்பியது? யார் குழப்பினார்கள்?

காரணத்தை அறிய முடியாநிலை அவர்களின் கவலையை அதிகரிக்கவே செய்தது.

பொன்னம்பல வாத்தியாருக்கு அந்தச் செய்தியைச் சொன்னவள் அவருடைய மனைவி தங்கம்தான்.

சாய்வு நாற்காலியில் இருந்தபடி அன்றைய தினசரியில் வெளியான விளம்பரத்தைப் பார்த்து உள்ளூர மகிழ்ந்து கொண்டிருந்தவரிடம் தங்கம் சொன்னாள்.

செல்வமணீன்ரை உந்தக் கலியாணம் குழம்பிப் போய்ச்சுதாம்

என்ன விசர்க்கதை.. இஞ்சை பேப்பரிலை அழைப்பும் வந்திட்டது.

அதினாலைதான் உந்தக் எண்டனான் உங்களுக்கு விளங்கேல்லையே?

ஏன் குழம்பினதாம்?

என்னவோ பிடிவாதத்தில நிக்கிறாளாம்... சின்னம்மாக்காவுக்கு வடிவா ஒண்டும் தெரியேல்லை... இப்ப அங்கைதான் போறா.. திரும்பி வரேக்கை என்னைக் காணச்சொல்லிப்போட்டு வந்தனான்.

கல்யாணம் குழம்பிவிட்டதை நம்ப முடிந்தாலும் செல்வமணி பிடிவாதம் பிடித்துக் குழப்புகிறாள் என்பதை அவரால் நம்ப முடியவில்லை.

ஆசிரியத் தொழிலை ஒரு தொண்டாகக் கருதி செயற்பட்டவர் அவர். பெற்றோர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி மாணவர்களின் குடும்பப் பின்னணியையும் பொரு ளாதார நிலையையும் நன்கு அறிந்து பொருத்த மானகற்பித்தல் முறைகளைக் கையாண்டவர். அதனால் பலருக்கும் நன்கு தெரிந்த பலரையும் நன்கு தெரிந்து வைத்திருந்த ஒருவராக அவர் விளங்கினார். முக்கியமான விஷயங்களில் அவருடைய ஆலோசனைகளைக் கேட்டு அவற்றை அச்சொட்டாகப் பின்பற்றும் பலர் அங்கிருந்தனர்.அவருடைய சேவைக் காலத்தின் இறுதிப் பகுதியிலிருந்து ஓய்வு பெற்று அமைதியாக வாழ்கின்ற இப்போதும் அவர் செய்து வருகின்ற பலதரப்பட்ட சமூகசேவைகள் பலருக்குத் தெரியாத ஒன்று. கல்யாணம் பொருத்துவது. பிள்ளைப் பாக்கியம் இல்லாத அவருக்கு அதில் பரம திருப்தி.

தானாக வலிந்து செல்லாமல் கலியாணத் தரகர் என்ற நிலைக்கு இறங்காமல் தன்னைத் தேடி வருபவர்களுக்கு மட்டும் காதோடுகாதாகச் சில விபரங்களைக் கூறுவதுடன் அவருடை பணி முந்துவிடும். விஷயத்தைத் தொடர்வது சம்பந்தப்பட்ட பெற்றோரின் பொறுப்பு.

அப்படி ஒழுங்கு செய்யப்பட்ட கல்யாணந்தான் செல்வமணியின் கல்யாணமும்.

மாப்பிள்ளை சந்திரன்அயலூர்க்காறன். அவருடைய மாணவன் வெளிநாடொன்றில் உயர் பதவியில் இருந்தான். கை நிறைந்த சம்பளம் என்று சொன்னாற் போதாது கை நிறைந்து வழிந்து பையையும் நிறைக்கும் சம்பளம்.

சீதனமாக ஒரு சதத்தையும் அவன் எதிர்பார்க்வில்லை. கல்யாணச்செலவு முழுவதையம் ஏற்றுக் கொள்வதற்கும் அவன் தயாராகவிருந் தான் . பெண்குமாரான அழகியாக இருந்தாலே போதும். குணம் தான் முக்கியம். வெளிநாட்டில் அவனுடன் இணைந்து வாழக்கூடிய குடும்பப்பாங்கான பெண்ணாக ஓரளவு படித்தவளாக இருக்க வேண்டும். நாலைந்து ஆண்டு களின்பின் எல்லோரும் ஊருக்குத் திரும்பி விடலாம்.



சந்திரனுடன் வெளிநாட்டிலே தங்கியிருந்த அவனுடைய தகப்பன் இந்த விபரங்களையெல்லாம் பொன்னம்பல வாத்தியாருக்கு எழுதியிருந்தார். வாத்தியார் சொன்னாற் போதுமாம் கண்ணை மூடிக்கொண்டு எந்தப் பெண்ணுக்கும் தாலி கட்டுவதற்கு அவன் தயங்க மாட்டானாம்.

செல்வமணியின் உதவிகளைச் சமூகத்தின் ஏனையோர் பெற்று அனுபவித்துக் கொண்டிருக்க அவளுக்கு ஏதாவது வகையிலே உதவிசெய்யவேண்டும் என்ற ஆவலுடனிருந்த பொன்னம்பலவாத்தியாருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்து விட்டது.

செல்லையாவிடம் விஷயத்தைச் சொன்னபோது காலில் விழாக்குறையாக வாத்தியாரை வணங்கித் தன் பூரணமான சம்மதத்தைத் தெரிவித்தார். மகளின் எதிர்காலம் பற்றி அடி மனதில் இருந்த கவலையெல்லாம் அடியோடு பறந்துவிட்டது. இப்படியொரு மாப்பிள்ளை கிடைப்பதற்குக் கொடுத்து வைத்திருக்கவல்லவா வேண்டும். செல்வமணியின் விருப்பத்தையும் ஏதொ ஒரு வகையில் அவர் அறிந்து கொண்டார்.

கடிதத்தில் அவர் எழுதியிருந்தபடி சந்திரனும் பெற்றோரும் வெளிநாட்டிலிருந்து வந்துவிட்டனர். செல்லையாவுடன் அவர்களுக்கு நேரடித் தொடர்பை ஏற்படுத்திவிட்டு வழமைபோல் அவர் ஒதுங்கிக் கொண்டார். கல்யாண ஏற்பாடுகள் துரித கதியில் நடந்துகொண்டிருந்தது அவருக்கு மகிழ்வூட்டியது.

அழைப்பிதழ் கூட கண்ணுக்கு முன்னால் பத்திரிகையில் இருக்கின்றது.

இத்தனைக்கும் பிறகு கல்யாணம் குழம்புவதென்றால்....? மாணவர்களின் உள்ளும் புறமும் அவருக்கு நன்கு தெரியும். யாருக்கு யார் என்ற அவர் முடிவு செய்தாரேயானால் நூற்றுக்கு நூறு சரியாகவே இருக்கும். பிழைக்கவே மாட்டாது. அவர் பொருத்திய கல்யாணங்கள் ஒன்றுமே தோல்வியடையவில்லை. தமக்கு நல்வாழ்வளித்த தெய்வமாக அவர்கள் அவரைக் கருதினார்கள்.

செல்வமணியின் கல்யாணம் மட்டும் ஏன் குழம்பியது?

மாணவனாகஇருந்தபோது எல்லா வகையாலும் நல்லவனாக இருந்த சந்திரன் வெளிநாட்டுக்குப் போன பின்னர் கெட்டுப்போனானோ? தன்னிடமுள்ள குறைபாடுகளை மறைப்பதற்காகத்தான் சீதனமே தேவையில்லை என்றானோ... எல்லாச் செலவுகளையும் தானே எற்பதற்கும்முன் வந்தானோ... இவற்றைச் செல்வமணி அறிந்தபடியால்தான் இப்போது வேண்டாம் என்கிறாளோ...?

காரணத்தை ஊகிக்க அவரால் முடியவேயில்லை. தன்கணிப்புப்பிழைத்து விட்டதே என்ற கவலையில் மனம்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

# போதையிலே போதை மேற்குலகின் காதை

பாலகுமாரன்

மீண்டும் இப்போது அமெரிக்காவில் மட்டுமன்றி, புதிதாக ஐரோப்பிய நாடுகளிலும் ஏன் ருஸ்சியாவிலும்கூட அச்ச அலையொன்று பரவுகின்றது. குறைந்துவிடும் எனக்கருதப்பட்ட போதைப்பொருள் பயன்பாடு, போதைப்பொருள் வணிகம் என்பன மீண்டும் படுவேகமாக அதிகரிப்பதே இதற்குக் காரணமாகும். ஏனென்றால் மிகவும் குறைவான காலப்பகுதிக்கு முன்னர்தான், இத்தாலியின் சிசிலிப் பகுதியைத் தலைநகரமாகக்கொண்ட மாபியாவின் முதுகெலும்பு முறிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதுபோலவே கொலம்பியாவில் மெடலின் நகரில் மையங்கொண்டிருந்த பாரிய போதைப்பொருள் வணிகக் குழுமமான மெடலின் காட்டேலின் அதிபர் பப்லோ எஸ்கோபார் கொல்லப்பட்டபின், மெடலின் காட்டேலும் சிதறிவிட்டதாக அமெரிக்கா பெருமையடித்துக்கொண்டது. ஆனால் இப்போது நிலை ஏறுக்குமாறாகவுள்ளது. மீண்டும் அமெரிக்காவிலே போதைப்பொருள் பயன்பாடு, அதனால் பாதிப்படைவோர், இதனோடு தொடர்புடைய பெருங்குற்றங்கள் வெகுவேகமாக அதிகரிக்கின்றன. கொக்கேயின் (Cocaine) பயன்பாட்டால் உயிராபத்தான நிலையில், மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுவோர் தொகை 1991 ஆம் ஆண்டிலிருந்து 25 விழுக்காட்டிற்கு மேலாக அதிகரித்துவிட்டது. சில புள்ளிவிபரங்கள் – இவை முழுமையானவை அல்ல என்றபோதும் அதிர்ச்சியூட்டத் தக்கவை. 1992 ஆம் ஆண்டில் 80 மில்லியன் (8 கோடி) அமெரிக்கர் மர்யுவானா (Marijuana), எல். எஸ். டி. (L.S.D.), கிராக் (Crack) எனப்பலவகையான போதைப் பொருட்களை பயன்படுத்த முயன்றிருக்கின்றார்கள்; பரீட்சித்துப் பார்த்தார்கள். அதே ஆண்டில் 23 மில்லியன் அமெரிக்கர்கள் முழுமையான போதைப்பொருள் நுகர்விற்கு உட்பட்டனர். 11 மில்லியன் பேர் வழமையான பயன்பாட்டாளர். 6 மில்லியன் பேர் மிகமோசமான போதைப்பொருள் பயன்பாட்டிற்கு உட்பட்டவராவர். இவை காரணமாகக் குற்றங்கள் பெருகி கடந்த 10 ஆண்டுகளுக்குள் சிறையில் இருப்போர் தொகை மும்மடங்காகிவிட்டது. உலகத்திலேயே ஓர் உச்சச் சாதனையாக ஒரு இலட்சம் பேரில், 426 பேர் சிறை வாழ்வோராக இருக்கும் நாடு உலகிலே அமெரிக்கா ஒன்றுதான்.

## அலறியடிக்கும் அமெரிக்கா

எனவே இத்தகைய நிலையில் அமெரிக்க நிர்வாகம் அலறியடிப்பதில் ஒன்றும் அதிசயமில்லைத்தான். அமெரிக்காவின் எதிர்பார்ப்பிற்குமாறாக, மெடலினுக்குப் பதிலாகக் கொலம்பியாவின் இன்னொரு நகரான காளியில் (Cali) நிலைகொண்டுள்ள காளி காட்டேல் மிகப்பாரிய பூதாகரமான போதைப்பொருள் வணிகக் குழுமமாகிவிட்டது. அதேவேளை புதிது புதிதாகப் பல மூன்றாம் உலக நாடுகளில், பல்வேறு வல்லாண்மையுள்ள வன்முறைக் குழுக்கள் இவ்வணிகத்தில் ஈடுபட்டு, பெரும் பொருளீட்டி தத்தம் நாட்டுப் பொருண்மியத்தையே ஆட்டிப்படைக்கும் நிலை தோன்றுகின்றது. இவை போதைப்பொருளைக் கடத்த, நாள்தோறும் புதிய உத்திகளைப் பயன்படுத்திய வண்ணமேயுள்ளன. கொங்கிறீட் கான்களுக்குள், பழச்சாற்றுத் தகரத்துக்குள், உறைந்துபோன மீனுக்குள் எனப் போதைப்பொருள் கப்பலேறிக் கடல்வழியாக எங்கும் தடைதாண்டுகின்றது. உலகின் தலைசிறந்த பொருண்மியப் பல்கலைக்கழகமாகக் கருதப்படும், கார்வேட் பல்கலைக்கழகப் பொருளியல் பட்டதாரிகளைத் தமது ஆலோசகர்களாக, பொறியிலாளர் போன்றோரைத் தமது பணியாளர்களாக, அரசியல்வாதிகள், நீதிபதிகளைத் தமது உதவியாளராக, செய்மதிகள், கணனிகள் போன்றவற்றைப் பயன்படுத்திச் செயற்படும் இவர்களைத் தடுப்பது எப்படி என்பதே இன்றைய கேள்வி.

இத்தகைய போதைப்பொருள் வணிகத்திற்கு எதிரான போராட்டமொன்றிற்கு, இன்று அமெரிக்காவே தலைமை தாங்குகின்றது. இன்று அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாக அதன் நிதியுதவியோடு தொடர்புபட்டதாக இக்கொள்கை அமைந்துவிட்டது. அமெரிக்காவில் போதைப்பொருள் பயன்பாட்டைக் குறைப்பதற்கு அவை உற்பத்தியாகும் நாடுகளிலே அவற்றினை இல்லாதொழிக்கப்போவதாகச் சூளுரைத்து, இலத்தீன் அமெரிக்கப் போதைப்பொருள் உற்பத்தி நிலைகள்மீது, பெரும்போரையே பிரகடனப்படுத்தியவர் முன்னாள் சனாதிபதி புஸ் ஆவார். அமெரிக்க வரவு செலவுத்திட்டத்திலே கணிசமான தொகைகளை ஒதுக்கி, இருமுனைப் போரொன்றை புஸ் தொடங்கினார். பல்வேறு போதைப்பொருள் தயாரிப்பிற்கும் காரணமாக அமையும் – இலத்தீன் அமெரிக்க அந்தீஸ் மலைச்சாரலில் விளையும் கொக்கேயின் (கொக்கோ எனும் ஒருவகைத் தாவரத்திலிருந்து பெறப்படுவது), பொப்பிச் செடியிலிருந்து பெறப்படும் கெரோயின் (Heroin) இவற்றினை உற்பத்தியாக்கும் நாடுகள்மீது பெரும் அழுத்தம் போடப்பட்டது. பொலிவியா, பெரு, கொலம்பியா ஆகிய மூன்று முதன்மையான இலத்தீன் அமெரிக்க நாடுகளில் கொக்கேயின் தயாரிக்கப் பயன்படும் கொக்கோச் செடியை வளர்த்து, வயிற்றைக் கழுவும் பல இலட்சக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு மாற்று வழிகளைக் காண்பிக்க – அதேவேளை போதைப்பொருள் தயாரிப்பாளர்மீது இராணுவ நடவடிக்கை எடுக்கத் தேவையான நிதி, ஆயுதங்கள், புலனாய்வுத் தகவல்கள், படைப்பலங்கள் என இந்நாடுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. 5 ஆண்டுகளுக்கு முன்தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் முதன்மை இலக்கு 10 ஆண்டுகளுக்குள் அமெரிக்காவுக்குள் வந்துசேரும் கொக்கேயினில் 50 விழுக்காட்டையாவது தடுக்கவேண்டும் என்பதுதான். இதற்காக அமெரிக்காவின் பல்வேறு துறைகள் ஈடுபடுத்தப்பட்டன. இவற்றுள் முக்கியமானது DEA என அழைக்கப்படும் (Drug Enforcement Administration) போதைப்பொருள் தடுப்புச் செயலணியாகும்.

## அமோகமாக வளரும் போதைப்பொருள் வணிகம்

ஆனால் இவ்வளவும் செய்தும் என்ன பயன்? புஸ்சின் திட்டம் பாதிவழிதாண்டிய நிலையில், இதுவரை 50 பில்லியன் (5000 கோடி) அமெரிக்க டொலர் செலவழிக்கப்பட்ட பின்னும், போதைப்பொருள் வணிகமும் அதன் நுகர்வும் அமோகமாகவே அதிகரிக்கின்றது. அதுமட்டுமன்றிப் போதைப்பொருட்களின் விலையும் உலகச்சந்தையிலே முன்னையைவிடக் குறைவாகவும் உறுதியாகவும் உள்ளது. 1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்திலே ஒரு கிலோ கொக்கேயின் (இங்கே ஒரு கிலோ எனப்படுவது, இதேயளவான கொக்கோ இலையின் நிறையோடு தொடர்புடையது.) விலை ஏறத்தாழ 50,000 அமெரிக்க டொலராக (25 இலட்சம் ரூபா) இருந்தது. இன்றோ 16,000 – 20,000 அமெரிக்க டொலருக்கு (8 – 10 இலட்சம்) இடைப்பட்டதாக நிலையாகவுள்ளது. அதேபோல் ஐரோப்பிய உள்நகரங்கவில்கூட இப்போது புதிய சந்தைகள் இனங்காணப்படுகின்றன. முன்னர்போலவே இப்போதும் இலத்தீன் அமெரிக்க வணிகத்தின் மையமாகக் கொலம்பியாவே விளங்குகின்றது. 80 விழுக்காடு அமெரிக்கப் பயன்பாட்டுக்கான கொக்கயின்இங்கிருந்தே செல்கின்றது. அது மட்டுமன்றி, கடல்வழி யாக ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா என உலகத்தின் விநியோக மையமாகவே கொலம்பியா உள்ளது. மியான்மாருக்கு அடுத்தபடியாக கெரோயின் உற்பத்தியில் உலகிலேயே இரண்டாம் இடத்தையும் கொலம்பியாவே பெறுகின்றது. அதேவேளை மெக்சிக்கோ, பிரேசில், வெனிசூலா போன்ற நாடுகளும் கொலம்பியாவோடு கூட்டுச்சேர்ந்து, புதிய புதிய வணிக ஏற்பாடுகளைச் செய்கின்றன. இது இலத்தீன் அமெரிக்க நிலை. ஆசியாவின் நிலையோ இன்றும் அதிசயமானது. இலத்தீன் அமெரிக்காவில் கொக்கோ செடியென்றால், இங்கு பொப்பிச்செடி. பொன் முக்கோணப் பகுதி (Golden Triangle) என்று அழைக்கப்படும் மியான்மார், தாய்லாந்து, லாவோஸ் ஆகிய மூன்று நாடுகளை உள்ளடக்கிய பகுதியே உலகின் 80 விழுக்காடு கெரோயின் உற்பத்திக்குப் பொறுப்பாகவுள்ளது. அமெரிக்கர்களுக்குத் தேவையான 60 விழுக்காடு கெரோயின் மியான்மார் ஊடாகவே செல்கின்றது. மியான்மாரின் சான் (Shan) இனக்குழுவின் தலைவராகக் கருதப்படும், பெரும் போதைப்பொருள் சாம்ராச்சியத்தின் முடிசூடா மன்னனான குன்சா (Khunsa) எனப்படும் சியாங் சிபியு (Chiang Sifu) என்பவரே இவ்வணிகத்தைக் கட்டுப்படுத்துபவராவர். இவர் தனது வருவாயைத் தனது சான் பகுதிப் பொருண்மிய மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துவது மட்டுமன்றி, பலவித உட்கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்வதோடு,

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# இலங்கைத் தீவில்...

எல்லாவற்றுக்கும் மேலாகப் போர் தோற்றுவித்துவிட்ட எல்லைகள் கடந்த, "என்ன நடக்குமோ" எனும் அங்கலாய்ப்பு மனோநிலை, இவற்றின் விளைவுகளால் சிறீலங்கா அரசு வேறுவழியின்றி விடுதலைப் புலிகள் பல ஆண்டுகளாய் நீட்டிய நேசக்கரத்தை இறுதியாகத் தொட்டுப் பார்க்கின்றது.

ஆயினும் பற்றிப் பிடிப்பதற்கு மனதைச் சுற்றியுள்ள "நாம் ஆள்வோர், அவர்கள் ஆளப்படுவோர்" எனும் தத்துவச் சகதி விடுவதாயில்லை. திருமதி சந்திரிகா தனது முன்னேற்றகரமான மனோநிலையுடன் சில அடிகள் முன்னோக்கி நடந்தாலும் பௌத்த சிங்களப் பேரினவாதமும், இராணுவ வாதிகளும் அவருக்குக் காற்தடம் போடுவதை இலகுவாகக் காணக்கூடியதாக உள்ளது. அதேவேளை இராணுவத்திற்குப் பாரிய ஆயுதங்களை வேண்டி, நவீனப்படுத்தி விட்டால், நாளை அடக்கிப் பிடித்துவிடலாம் எனும் அடிமனத்து ஆசையும் சிறீலங்கா அரசை விடுவதாயில்லை. இதனாலேயே பாதுகாப்புச் செலவீனம் 27 கோடியாய் இருந்து, 29 கோடியாகக் கொடியேறி உள்ளதே தவிர, கொடி இறங்கவில்லை. எழுபதாம் ஆண்டுகளில் தமிழ்மக்களையும் தமிழ்த் தலைமைகளையும் பொருண்மியச் சலுகைகளால் வெட்டிப்பிரித்திட எடுத்த முயற்சிகளையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியால் மறக்கமுடியவில்லை. புதுப்பிப்பதற்கு, புனர்வாழ்வு, புனர்நிர்மானத் தேவைகளை தாம் அள்ளித்தரத் துடிப்பதுபோற் காட்டி, "இறால்கண்டு துள்ளிவரும் சுறாவாக தமிழ் மக்கள் எழுந்து வந்தால், தமது வார்த்தை ஜாலம் என்னும் தூண்டிலால் விடுதலைப் புலிகளைப் பிடித்துக்கொள்ளலாம்" எனும் ஒரு நப்பாசையும் இடைக்கிடை தலைகாட்டத்தான் செய்கின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து துள்ளிக் குதித்தால், பயணிகளைச் சுட்டுக்குவிக்க வசதியாக இருக்கும் என்பதனாலேயே, இராணுவ முகாம்களை அகற்றாமல், பாதைகளைத் திறந்து விட்டுள்ளோம் என தன்னிச்சையாக அறிவித்துள்ளது சிறீலங்கா. பகலில் மீன்பிடி இரவில் விடமாட்டோம், நாம் இட்டதுதான் சட்டம் என்கின்றது சிங்கள மேலாண்மை வாதம். எரிபொருட் தடைகொண்டு தொழில் முயற்சிகள் வளராது தடுக்கலாம். போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து, பொருண்மியம் வளராது தடுக்கலாம் என்ற சிறீலங்கா அரசின் மனக்கணக்கு தொடர்கிறது. அதேவேளை போரினால் சீர்குலைந்தவற்றைச் சீரமைக்க, வாழ்விழந்தவர்களை வாழ்விக்க, வாரி வழங்குங்கள் என வெளிநாடுகளிடம் இருந்து பணக்குவியல்களைத் தேடுவதற்கு இது ஓர் உத்தியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இதனால்தான் தலைவர் பிரபாகரன் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகள் பற்றியும் மோதல் தவிர்ப்புநிலைச் செயற்பாடுகள் பற்றியும் முடிவெடுக்கும் சபையொன்றை நிறுவி, அதில் விடுதலைப் புலிகளுக்கும் இடமளிக்கும்படி வலியுறுத்தி உள்ளார். இதுவே ஆரோக்கியமான நிலை உருவாக, அடித்தளமிடக்கூடிய நல்ல ஆலோசனையுமாகும்.

## முடிவுரை

இலங்கைத் தீவில் மோதல் தவிர்ப்பு ஏற்பட்டாலும் தத்துவப் போராட்டம் ஓயவில்லை. "பெரும்பான்மை–சிறுபான்மை" என்றொரு போராட்டம். "இது எம்நாடு அவர் குடியேறல்"

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# போதையிலே...

இராணுவ அரசுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றார். அத்தோடு மியான்மாரிடமிருந்து தன்னாட்சி காணவிரும்பும் கரீன் கச்சின் இனத்தாருக்கு ஆர்சான் சூகி அம்மையாரைத் தலைவியாகக்கொண்ட சனநாயக மீட்பு இயக்கத்திற்கு குன்சா உதவுவதாகவும் சொல்லப்படுகின்றது. இவருக்கும் சி. ஐ. ஏக்கும் தொடர்பு இருப்பதும் பலரும் அறிந்தசெய்தி.

எனவே இப்போதுள்ள நிலை இதுதான். போதைப் பொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வணிகக் குழுமங்களை இனிமேல் காட்டேல் (Cartel) என அழைப்பது பொருத்தமற்றது என ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். ஏனென்றால் காட்டேல் என்றால், விலையைக் கூட்டுவதற்காக உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கில், உற்பத்தியாளர் கூட்டுச்சேர்வது என்றபொருள். ஆனால் போதைப்பொருள் வணிகத்திற்கு இச்சிக்கலே இல்லை. இன்று மிக வலிமை வாய்ந்த பொருண்மியக் கூறுகளாக – பல்வேறு நுணுக்கங்களைக்கொண்டு – பல்வேறு துறைகளில் தமது முதலீட்டைப் பன்முகப்படுத்தி, வேரூன்றி நவீன பொருண்மியக் கோட்பாடுகளையெல்லாம் செல்லாக்காசாக்கி விட்டன. இவற்றிற்கு எல்லாம் அடிப்படைக்காரணி இவ்வணிகத்தின் விலைப்பொறிமுறைதான். எவ்வளவுக்கெவ்வளவு இவ்வணிகத்தில் ஆபத்துக்கள் அதிகரிக்கின்றதோ அவ்வளவிற்கு விலையும் அதிகரிக்கின்றது. எனவே இலத்தீன் அமெரிக்க விவசாயப் பண்ணையில் உற்பத்தியாகும் கொக்கேயின் அமெரிக்க வீதியிலே 200 மடங்கு கூடுதல் விலைபெறுகின்றது. தாய்லாந்துச் சந்தையில் ஒரு கிலோ பத்தாயிரம் டொலர் விலைபோகும் கெரோயின், அமெரிக்காவில் ஒரு கிலோ இரண்டு இலட்சம் டொலராகின்றது.

### *போதைப்பொருள் வருவாயே துணை*

எனவே இத்தகைய நிலையில் கொலம்பியா போன்ற நாடுகளின்மீதே குறிவைக்கும் அமெரிக்கச் செயற்பாடு கேள்விக்குரியதாகின்றது. ஒருவித இக்கட்டில் இந்நாடுகள் உள்ளன. ஏனென்றால் இந்நாடுகளின் முதன்மையான வருவாயை ஈட்டித்தருவதாக அல்லாமல், ஏழை விவசாயிகளின் நாளாந்த வாழ்வே கொக்கேயின்செடியிலே தங்கியுள்ளது.

கொலம்பியா, பெரு போன்ற நாடுகளிலே இடதுசாரிப் போராளிக் குழுக்கள் இத்தகைய கொக்கோ பயிர்ச்செய்கைக்குப் பாதுகாப்புக் கொடுப்பதோடு, ஏழை விவசாயிகளுக்கு அவர்களது பயிருக்குஉரிய விலையைப் போதைப்பொருள் வணிகர் கொடுப்பதையும் உறுதிப்படுத்துவதோடு, தாமும் நிதியைப் பெறும் விந்தையும் நடக்கின்றது. எனவே இத்தகைய மக்களுக்கு வேறு நிலங்கள் கொடுத்து, மாற்றுப் பயர்ச்செய்கைக்கு ஒழுங்குகள் செய்துகொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பு இன்னமும் முழுமை பெறவில்லை. இதனாலேயே அண்மையில் கொக்கோ பயிரிடும் நிலப்பரப்பைக் கைவிடச்செய்ய முனைந்த கொலம்பிய நாட்டு அமைச்சர் ஒருவர் மக்களால் பெரிதும் அவமதிக்கப்பட்டு, மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றையும் அங்கு நடத்தினர். இது ஒரு சிக்கல். இரண்டாவது சிக்கலோ இதைவிட நெருக்கடியானது. ஏனென்றால் கொலம்பியா போன்ற நாடுகளிலே போதைப் பொருள் வணிகக் குழுமங்கள் தம்முடைய இலாபத்தைப் பலவாறாகப் பலதுறைகளில் முதலிட்டு, கொலம்பிய நாட்டுப் பொருண்மியத்தையே மறைமுகமாகக் கட்டுப்படுத்துகின்றனர். அத்தோடு நவீன மின்னியல் சாதனங்களை மலிவாக விற்கும் வணிக நிலையங்களை, நிலங்களை வாங்கி பலமாடி அடுக்குக் கட்டடங்களைக் கட்டிப் பெரும் முதலீட்டாளர்களாக மாறுகின்றனர். கொலம்பியாவின் விவசாயம் செய்யப்படும் மூன்றிலொரு பகுதி நிலம், இவர்கள் கையிலே இருப்பதாகக் கூறப்படுகின்றது. அத்தோடு மக்களின் வாழ்வைப் பாதிக்கும் சமூகத்துறைகளில் முதலிடுகின்றனர். மருத்துவமனைகள், களியாட்டவிடுதிகள், திரைப்படச்சாலைகள் என இவர்கள் முதலீடுகள் நீள்கின்றன. இத்தகைய போக்குக்காரணமாகக் கொலம்பிய நாணயத்தின் பெறுமதியே டொலருக்கு எதிராக அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. போதைப் பொருட் துறைப் பொருண்மிய ஆய்வாளர் ஒருவரின் கணிப்பீட்டின்படி கடந்த 10 ஆண்டுகளுக்குள் ஆண்டுதோறும் ஏறக்குறைய ஒன்றரை பில்லியன் தொடக்கம் இரண்டரை பில்லியன் டொலர் பணம் அமெரிக்க, ஐரோப்பியப் பகுதிகளின் விற்பனைப் பணமாகக் கொலம்பியாவுக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகின்றது. சுருக்கின் போதைப்பொருள் மூலதனம் என்பது, கொலம்பிய நாட்டு மூலதனவாக்கத்தில் பெரும்பங்குவகிக்கின்றது என்பதுதான்.

### *நாய்விற்ற காசு குரைக்குமா?*

எனவேதான் இத்தகைய நிலையில், போதைப்பொருள் வணிகக் குழுமங்களை அழிக்கவும் முடியாமல், முற்றிலுமாக மோதமுடியாத நிலையில் இவற்றோடு ஒருவகை உடன்பாடுகாணவே பல நாடுகள் முயல்கின்றன. கொலம்பியாவில் மட்டுமல்ல, போதைப்பொருள் வணிக உலகிலே இப்போது மிக்கபரபரப்பாக அடிபடும் செய்தி கொலம்பியக் காளி காட்டேல் அமைப்பின் மிகமுதன்மையான பங்குதாரர்களான றொட்றிகோஸ் சகோதர்கள் எனப்படும் மிகேயில், ஜில் பேட்டோ றொட்றிகோ ஒரேயுலா (Igue Gibero Rodrigue Oreejuele Brothers) ஆகிய இருசகோதரரும் சில நிபந்தனைகளைக் கொலம்பிய அரசு ஏற்குமிடத்து தாம் சரணடையத் தயாராக இருப்பதாக வெளிவந்த செய்திதான் அது. நான்கு ஆண்டுகளிற்கு மேற்படாத சிறை; அமெரிக்காவிடம் ஒப்படைக்கக் கூடாதுபோன்ற சில நிபந்தனைகளை இவர்கள் விதித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் இவ்வாறு மனம் மாறியதற்குக் காரணம், இவர்கள் தொழில் படுத்துவிட்டது என்பதாலோ அல்லது போதைப்பொருள் தடுப்புச்செயற்பாடுகளின் தீவிரம் தாங்கமுடியாமையாலோ அல்ல; இரகசிய உலகிலே எக்கச்சக்கமாகப் பொருளீட்டி வெளி உலகிலே மிகப்பாதுகாப்பாக அவற்றினை முதலிட்டபின், அபாயகரமான தொழிலில் இருந்து சற்றுவிலகி, இறுதி நாட்களை வசதியாக வாய்ப்பாகக் கழிக்கக்கூடும் என நம்பப்படுகின்றது. காரணம் எதுவாக இருந்தபோதும், அமெரிக்கா இத்தகைய முயற்சிகளை விரும்பவில்லை. தமதுநிலை புரியாது மேற்குலகம் இவ்விதம் தடுக்கின்றது என, இலத்தீன் அமெரிக்க நாடுகள் நினைக்கின்றன. தமது இத்தகைய இக்கட்டான நிலைப் பாட்டிற்குப் பின்னாலுள்ள தவிர்க்க முடியாத பொருண்மியக் காரணியைச் செல்வந்த மேற்குலக நாடுகள் இன்னமும் அறியவில்லை. போதைப்பொருள் வணிகம் மேலோங்குவதற்கு இவர்கள் நாடுகளிலிருந்து எழும் கேள்வி அல்லவா காரணம். போதைப்பொருள் தடுப்பு செயற்பாடுகள் என்பது, இதற்குப் புறம்பானது அல்லவா? என்கின்றனர்.

### *உனக்கொரு நீதி எனக்கொரு நீதி*

இப்போது இங்கே எழும் பெரும் கேள்வி என்னவென்றால், போதைப்பொருள் உற்பத்திசெய்யும் விற்பனை செய்யும் நாடுகளைக் கடுமையாகத் தண்டிக்கமுயலும் அமெரிக்கா, தனது சி. ஐ. ஏ. செய்யும் திருவிளையாடல்களைக் கண்டும் காணாமலிருப்பதுதான். ஆசிய, இலத்தீன் அமெரிக்காவின் பல போதைப்பொருட் சாம்ராச்சிய மன்னர்களோடு சி. ஐ. ஏக்கு இரகசியத் தொடர்பு இருப்பதும் பல்வேறு இரகசியச் செயற்பாடுகளுக்கு இவர்களைப் பயன்படுத்துவதும் இன்றளவும் தொடரும் கதை. ஆப்கானித்தானில் கிஸ்பி இசுலாம் குழுவின் தலைவரான கெக் மாட்டியர் ஊடாகப் போதைப்பொருள் வணிகத்தை ஊக்குவித்தது. நிக்குரகுவாவில் கொன்றா எதிர்ப்புரட்சிக் குழுவிற்கு ஆயுதங்கள் வழங்க, போதைப்பொருள் வணிகத்தைப் பயன்படுத்தியது என இப்பட்டியல் நீளும். எனவே இத்தகைய நிலையில் அனைத்துலகப் பொருண்மியத்தின் திறந்த பொருண்மிய விதிகளை – அதன் பலவீனங்களைப் பயன்படுத்தி, அதில் முதலிட்டவர்களோடு, போதைப்பொருள் வணிகக் குழுக்களின் முடிசூடா மன்னர்களோடு தொடர்புகளைப் பேணும் அமெரிக்கா மூன்றாம் உலகநாடுகள் பலவற்றைத் தண்டிக்க முற்படுவது விந்தைதான்.

இத்தகைய முரண்பாடுகள் எவ்வாறாக இருந்தாலும், வெட்ட, வெட்ட முளைக்கும் இந்நவீன சூரர்கள் வாழும் இன்னொரு உலகம் எமக்குக் கீழே இருப்பதையும் எமதுலகத்தின் மூக்கணாங்கயிறு அதனிடமே உள்ளது என்பதையும் நாம் மறைக்க முடியாது. ஏனென்றால் அன்பு, அறம், அகிம்சை பற்றிப்போதிக்கும் இவ்வுலகின் அதிர்ச்சியூட்டும் இம்முகமே அதன் உண்மைமுகம் சொந்தமுகம் என்று சில சமூகவியலாளர்கள் இன்று கூறுகின்றனர்.

# இலங்கைத் தீவில்...

என ஒரு மாறாட்டம். "சிங்கள நாடு பௌத்த மதம், இதன் மேலாண்மை அழியாத தீர்வு உண்டா" என்ற தவிப்பு. "நாம் கொடுக்கவேண்டும், அவர்கள் பெறவேண்டும்".

"நாம் எப்படிக் கொடுப்பது? அவர்களை எப்படிப் பெறப்பண்ணுவது" என்றொரு சிக்கல். இதுதான் பேச்சுவார்த்தை தள்ளாடித் தள்ளாடி நிற்பதன் தத்துவம். அவர்களின் தத்துவங்களைத் திருத்தி, நடைமுறை அரசியல் தத்துவத்தை உணரவைக்கும் வலிமை விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பது உலகுக்கு நன்கு தெரியும்.

அதனாற்தான் அனைத்துலக சமூகம் "அமைதி நிலைபெற விடுதலைப் புலிகளுடன் பேசுவது ஒன்றேவழி" என சிறீலங்கா அரசிற்கு அடிக்கடி நினைவுபடுத்தி வருகிறது. இங்கு, "யாரும் ஏமாறவோ, ஏமாற்றவோ முடியாதவாறு இருதேசிய இனங்கள் இருதரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன" என்ற உண்மையை உணர்ந்தால் யார் ஏமாறுவர், ஏமாற்றுவர் என்ற எண்ணம் இருதரப்புக்கும் ஏற்படாது. ஸ்பானிய சனநாயகத் தலைவர் அடோல்வ் சுயேர்ஸ் (Adolfo Suarez) கூறியது போல, "எதிர்காலம் என்பதை எம்மால் எழுத முடியாது, ஏனெனில் அதனை மக்களால் மட்டுமே எழுத முடியும்" (The Future is not Written, because only the People can Write it).

# வீரபுரம்...

இந்த வீடமைப்புத் திட்டத்தில் தமிழர்களே வசிக்கின்றனர். இவர்களுக்கு விவசாயச் செய்கைக்கென பகிர்ந்தளிக்கப்படுவதற்காக 400 ஏக்கர்காணி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த முடிவில் பின்னர் மாற்றம் செய்யப்பட்டது. விவசாயக் காணியில் பெரும்பான்மை இனமக்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்குவதென முடிவெடுக்கப்பட்டது.

அண்மையில் இக்காணியைத் துப்பரவு செய்வதற்கென கனரகப் பொறிகள் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டபோது, வீரபுர தமிழ்க் குடியேற்றக் குடுமபங்கள் ஒன்றுதிரண்டுவந்து, தங்களது ஆட்சேபத்தைத் தெரிவித்தன.

இந்தக்காணி எமது விவசாயத்திற்கென முன்னர் ஒதுக்கப்பட்டதாகும். இக்காணியை எமக்குப் பகிர்ந்தளிப்பதைவிடுத்துப்; பெரும்பான்மையினருக்கான வீட்டுத் திட்டமொன்றைத் தொடங்குவது எந்தவகையில் நியாயம், என மக்கள் கேள்வி எழுப்பினர்.

தற்போது இம்மக்கள் இது குறித்து, அரச அதிபருக்கும் பிரதேச செயலருக்கும் புகாரிட்டுள்ளனர்.

# கடல் வளம்...

செயலக கூட்டுறவுப் பரிசோதகர் திரு. மோ. சிவமயம், போரூட் சுற்றாடற் பாதுகாப்பு ஆலோசகர் திரு. இ. சந்திரசேகரசர்மா, உதவித்திட்டப் பணிப்பாளர் திரு. மகேந்திரன், திரு.ச. காந்திதாசன், பருத்தித்துறை துறைமுகப் புனர்வாழ்வு அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. சிவலிங்கம், பரிசோதகர் திரு. தர்மலிங்கம், செல்வி நவமணி கந்தையா மற்றும் பலரும் உரைநிகழ்த்தினர்.

இறுதியில் ஓய்வூதியச் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெற்றது. திரு. வே செந்திவேல், திரு. ந. கணேசமூர்த்தி அவர்களுக்கு வாழ்த்துப்பா வழங்கினார். திரு. பாலசிங்கம் நன்றியுரை வழங்கினார்.

இவ்வைபவம் தொடங்க முன்னர், தமிழீழத் தேசியக்கொடியை யாழ். மாவட்டஅரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி ஏற்றிவைத்தார். புதிய கட்டடத்திற்கான நாடாவை, யாழ். மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு. அ. யோசேப் சம்பிரதாயபூர்வமாக வெட்டித் திறந்துவைத்தார்.

# புத்தளம் வீதியில்...

எனக்கூறப்படுகின்றது.

தாக்குதல் நடத்தியவர்கள் விட்டுச்சென்ற ரி 81 ரகத் துப்பாக்கி ஒன்று, பின்னர் அங்கு மீட்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர். கொலைஞர்கள் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொல்லப்பட்ட இருமுசுலிம்களும், லொறியின் சாரதியும் நடத்துனரும் என்று கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட செல்வந்தரான தமிழ்ப்பொதுமகன் முன்னர் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசித்தவர் என்றும் இம்மாத முற்பகுதியில் இவரின் குடும்பத்தினருடன் வவுனியாவில் புளொட் குழுவினர் தகராறு செய்தபோது, புளொட் உறுப்பினர் ஒருவர் கைகலப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இவர் குடும்பத்தோடு அச்சம் காரணமாகப் புத்தளம் சென்று தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

சந்தேகநபர்களைக் கைதுசெய்ய, புத்தளம் பொலிசார் வவுனியாப் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியைக் கோரியுள்ளனர்.

# புதிய நிர்வாக மையமும் உள்ளடக்கப்பட வேண்டிய...

4. வீதிகளில் நிழல் மரவரிசைகளை உருவாக்குதல்.

கட்டிடச்சூழலும் பாரம்பரியமும்

பழமையான நகரங்களைப் பொறுத்தவரை நகரின் கட்டிடச்சூழல் அவற்றின் பல்வேறு வரலாற்றுக் கட்டிடங்களையும் பிரதிபலிக்குமாறு அமைகின்றன. பல்வேறு கட்டிடக்கலைப் பாணியிலமைந்த கட்டிடங்களும் வேறு அமைப்புக்களும் சமுதாயத்தின் வரலாற்று உணர்வுகளுக்கு உரமூட்டுவனவாக அமைகின்றன.

புதிய நகரங்கள் அமைக்கப்படும்போது, உருவாகும் கட்டிடச்சூழல் எத்தகைய மனப்பதிவைக் கொடுக்கவேண்டும் என்பதும், வரலாற்று உணர்வையும் தனித்துவத்தைப் பேணும் சமுதாய ஆர்வத்துக்கு எவ்வழிகளில் இடமளிக்கலாம் என்பதும் நகர அமைப்புக்கான திட்டமிடலின்போது விடைகாணப்பட வேண்டிய விடயங்கள்.

இது சம்பந்தமான அணுகுமுறை நகரின் கட்டிடச்சூழல் சார்ந்த சிறப்பம்சங்களை உருவாக்கக்கூடும்.

நமது நகரங்களுடைய கட்டிடச்சூழல் நமது பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கவேண்டுமென்ற உணர்வுரீதியான தேவை நமது சமுதாயத்தின் பல மட்டங்களிலும் இருந்துவருவது கண்கூடு. பாரம்பரியத்துக்கு மதிப்பளிக்காது உருவாக்கப்படும் நகரம் "வேரில்லாத மரம்போன்றது" என்ற ஒரு கருத்து உண்டு. இந்த அடிப்படையில் இத்தகைய ஒரு தேவைபற்றிக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளல் நியாயமே.

எனினும் கட்டிடக்கலைத்துறையில், நமது பாரம்பரியம் எவ்வாறு இனங்காணப்பட்டுள்ளது என்பதும், அது என்ன முறையில் கட்டிடங்களில் பிரதிபலிக்கப்படுகின்றது என்பதும் முதன்மையான கேள்விகளாகும்.

நமது கட்டிடக்கலைப் பாரம்பரியமானது, "திராவிடக்கலை" என்பதனுள் அடங்கிவிடுவதாகப் பலரும் கருதுகிறார்கள். மேலும் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும்கூட மேற்படி பாணியிலேயே பிரதிபலிக்கவேண்டும் என்ற கருத்தும் வேரூன்றியுள்ளது. இது ஒரு தவறான நிலைப்பாடாகும்.

தற்காலத்தில் திராவிடக்கலை எனப்பயிலப்பட்டுவருவது, வெறும் அலங்காரங்களே. அதுவும் இற்றைக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு கைக்கொள்ளப்பட்டவைகளே அவையாகும். ஒரு குறிப்பிட்ட பாணியானது, அவ்வக்காலத்து விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிமட்டத்தின் பின்னணியிலேயே அதற்குரிய மதிப்பைப்பெறுகின்றது. 16 ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு, திராவிடக்கட்டிடக்கலை வளரவில்லை என்பதற்காக அதுவே காலாகாலத்துக்கும் பயிலப்படவேண்டியது என்பது பொருந்தாது.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அவற்றுடன் கலைத்துறையும் பன்மடங்கு முன்னேறிவிட்டன. இத்தகைய காலகட்டத்தில் அதாவது, 21 ஆம் நூற்றாண்டின் வாயிற்படியில் நிற்கும் தமிழர் சமுதாயம் தன்னுடைய வளர்ச்சிமட்டத்தைக் கட்டிடக்கலைத்துறையில் பிரதிபலிப்பதே பொருத்தமானது.

எனவே நமது புதிய நகரங்களின் கட்டிடச்சூழலில் நமது பாரம்பரியத்தின் சாரத்தைப் பிரதிபலிக்கும்வகையில் காலத்துக்கேற்ற கட்டிடங்கள் உருவாவதையே ஊக்கப்படுத்தல்வேண்டும்.

நினைவுச்சின்னங்களும்
பௌதீகச்சூழலும்

சமுதாயமொன்றின் உணர்வுரீதியான தேவைகள், இன்னும் பலவழிகளிலே நகரமொன்றின் பௌதீகச்சூழலிலே சிறப்பியல்புகளாக வெளிப்படுகின்றன. இவற்றுள் சிலைகள், நினைவுச்சின்னங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. நகரத்திட்டமிடலின்போது இத்தகைய தேவைகள் பற்றிக் கவனத்துக்கு எடுத்துக்கொண்டால், நகரின் சிறப்பம்சங்களாக இவற்றை விளங்கச்செய்யமுடியும்.

பூங்காக்கள், சதுக்கங்கள் அல்லது வேறு பொருத்தமான இடங்களில் இவற்றை நிறுவுவதற்கு இடங்கள் ஒதுக்கப்படலாம். இவை நிறுவப்பட்டுள்ள சூழலுக்கு அழகையும் உணர்வுசார்ந்த அம்சங்களுக்கு வலுவையும் கொடுப்பதற்கு ஏற்றவகையில், அவற்றின் பரிமாணங்கள் அமைதல் அவசியம். முதன்மைத்துவம்வாய்ந்த இவ்வாறான சில சின்னங்கள் நகரின் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கான குவிமையமாக அமையும்படி அபிவிருத்திசெய்யப்படலாம்.

சூழலின் தன்மைக்கு ஒவ்வாத பரிமாணங்களைக்கொண்ட சிலைகள் அல்லது சின்னங்களும் பொருத்தமற்ற இடங்களில் அமையக்கூடிய சின்னங்களும் தவிர்க்கப்படுதல் அவசியம்.

எதிர்காலம் பற்றிய நோக்கு

யதார்த்தபூர்வமான முறையில் வடபிரதேசத்தின் அபிவிருத்தி திட்டமிடப்படுகின்றபோது, குடாநாட்டினதும் யாழ். நகரினதும் தற்போதைய முதன்மைத்துவம் குறையும். எனினும் யாழ்ப்பாணம் அதன் உள்ளார்ந்த இயல்புகளைக் கருத்திற்கொண்டு கல்வி, பண்பாடு சார்ந்த துறைகளிலே முதன்மைத்துவம்பெறும் ஒரு நகரமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்று, யாழ். நகர அபிவிருத்தி சம்பந்தமாக அண்மையில் நியமிக்கப்பட்ட குழு சிபார்சுசெய்துள்ளது. இதுதவிர தேசிய உணர்வு, தேசிய எழுச்சி அந்நிய ஆதிக்க எதிர்ப்புப்போன்ற அம்சங்களில் யாழ்ப்பாணம் வரலாற்றுரீதியான முதன்மைத்துவம் உடையது. எனவே இவ்வம்சங்கள் தொடர்பிலும் யாழ்ப்பாணத்துக்குரிய சிறப்பம்சங்கள் வளர்த்தெடுக்கப்படலாம்.

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய நகரம் இதனின்றும் வேறுபட்ட சிறப்பம்சங்களைக்கொண்டதாக உருவாக்கப்படுதல் நல்லது. முதன்மையாக இந்நகர் நமது பாரம்பரியத்தின் வேர்களிலிருந்து உருவாக்கப்படும் அதேவேளை தற்காலத்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்களை உள்வாங்கி, நமது தேசத்தை அபிவிருத்தியடைந்த ஏனைய நாடுகளுக்கு இணையாக முன்னேற்றுவதற்கான ஓர் ஊக்கியாகச் செயற்படும் வகையில் அமைதல் விரும்பத்தக்கது. இதற்கு அமைவாகவே நகர அபிவிருத்திக்கான எண்ணக்கரு (Concept), உருவாக்கும் மனப்பதிவும் அமையும் வசதிகளும் இதனை அடிப்படையாகக்கொண்டிருக்கும்.

இவ்வாறானதொரு அணுகுமுறை புதியதொன்றல்ல. கடந்த ஐம்பதுகளில் இந்தியாவில், பஞ்சாப் மாநிலத்தின் தலைநகராக "சண்டிகார்" நவீனமுறையில் அமைக்கப்பட்டபோது, இம்மாதிரியான ஒரு நோக்கமே அடிப்படையாக அமைந்திருந்தது. இந்திய சமூகத்தில் வேரோடிப்போயிருந்த பலவாறான குறைபாடுகளிலிருந்து விடுபட்டு, சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான உந்துசக்தியாக விளங்கவும், இந்திய சுதந்திரத்தின்போது பாகிஸ்தான் பிரிவினையோடொட்டிய வன்முறைகளாலும், பெரிய அளவு இடப்பெயர்வுகளாலும் ஏற்பட்ட இழப்புக்களையும் துயரங்களையும் மறந்து, புதிய தேசத்தைக் கட்டியெழுப்பும் உத்வேகத்தைக் கொடுக்கவும் கூடியவகையில், நவீன நகரமாக சண்டிகார் உருவாகவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனால் இதுபற்றிக் கூறும்போது, ஜவகர்லால் நேரு அவர்கள், "சண்டிகார் புதிய இந்தியாவின் கோவில்" என்று குறிப்பிட்டார்.

## சிறப்பு வசதிகள்

வடபிரதேசத்துக்கான புதிய நகருக்கான எண்ணக்கருவை உருவாக்கும்போதும் இடம்பெறவேண்டிய வசதிகள், செயற்பாடுகளைத் தீர்மானிக்கும்போதும் நமதுநோக்கு விரிந்து இருக்கவேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் இயன்றளவு உலகத்தரத்தைப் பேண முயற்சிக்கவேண்டும்.

விளையாட்டு, கலை, பண்பாடு, பொழுதுபோக்குப் போன்ற துறைகள் நமது பிராந்தியத்தில் நலிவடைந்து இருப்பதற்கு இவற்றுக்குரிய வசதிகள் இல்லாமை முதன்மையான காரணமாகும். தற்போதுள்ள நகரங்களில் சிறப்பாக யாழ். நகரில் மேற்படி துறைகள் சார்ந்த அடிப்படை வசதிகளைக்கூடத் தேவையான இடத்தில் அமைப்பதற்கு இடவசதியின்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. நகரின் பெரும்பாலான பாடசாலைகளுக்கு விளையாட்டுத்திடல் வசதியில்லை. முதன்மையான பெரிய பாடசாலைகள் சிலவற்றிற்குக்கூட போதிய, விசாலமான திடல் இல்லை. பாடசாலைகள் மட்டத்திலேயே இவ்வாறான குறைபாடுகள் இருக்கும்போது தேசிய, அனைத்துலக மட்டங்களிலான விளையாட்டு வசதிகள் பற்றிக் கூறத்தேவையில்லை. கலை, பண்பாட்டுத் துறைகளிலும் அதேநிலைதான். நவீன தேவைகளுக்கேற்ற கலையரங்குகள், சிற்ப, ஓவியக் காட்சிக்கூடங்கள் போன்ற வசதிகள் இலங்கையின் தமிழர் பிரதேசத்தில் எங்குமேயில்லை.

புதிய நகரத்திட்டமிடலின்போது, மேற்படி அம்சங்களுக்குப் போதிய இடங்கள் ஒதுக்கப்படவேண்டும். உயர்தரத்திலான விளையாட்டு வசதிகள் புதிய நகரத்தின் சிறப்பம்சமாக உருவாக்கப்படலாம். பிராந்தியத்தின் பல்வேறு நகரங்களிலும் விளையாட்டு வசதிகள் அபிவிருத்திசெய்யப்பட்டு, புதிய நகரில் அமையும் விளையாட்டு மையத்துடன் தொடர்புபடுத்தப்படல்வேண்டும்.

புதிய நகரம் வடபிராந்தியத்தின் முதன்மையான நகரம் என்ற அந்தஸ்த்தைப் பெறுவதால், பெருமளவில் மக்கள் கூடக்கூடிய விழாக்கள், கூட்டங்கள், வேறு நிகழ்ச்சிகள் அதிகளவில் இடம்பெறுவதை எதிர்பார்க்கலாம். இவற்றுக்கான இடவசதிகள் நகரில் போதிய அளவு இடம்பெறுவது அவசியம். இத்தகைய இடவசதிகள் பெரிய திடல்கள், சதுக்கங்கள், வடிவில் உலகின் பல நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.இவ்வாறான திடல்களும் சதுக்கங்களும் சிறப்பான அணுகுபாதைகளுடன் அமைதல் சிறப்பானது. வைபவரீதியான அணிவகுப்புக்கள், பவனிகள், ஊர்வலங்கள் போன்றவை திடலை அணுகுவதற்கு இவை பயன்படும். இவ்வசதிகள் பல்வேறுவகையான உபயோகம் சார்பான அல்லது உணர்வுசார்பான தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் திட்டமிட்டு அமைக்கப்படுவதன் மூலம், சுறுசுறுப்பான செயற்பாடுள்ள பகுதிகளாக இவற்றை விளங்கச் செய்யமுடியும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள நகரில் பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் அமைவது சாத்தியமே. எனினும் இவை பற்றித் தீர்மானங்கள் எடுத்தல் பெருமளவுக்கு அரசியல் சம்பந்தப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் தங்கியுள்ளது. எனவே எவ்வளவு தெளிவாகக் கொள்கைகள் அமைகின்றனவோ அவ்வளவுக்கு நகரில் அமையவேண்டிய சிறப்பம்சங்கள் பற்றித் தீர்மானம் எடுப்பது சுலபமாக இருக்கும்.

மேலும் இப்புதிய நகரத்தொடர்பில் அமைவிடம், தொழில்நுட்பம், பொருண்மியம் சார்ந்த அம்சங்கள் பற்றிய மேலதிகமான விளக்கங்கள், சிறப்பம்சங்கள் சம்பந்தமாக, ஓரளவு துல்லியமாகத் தீர்மானங்கள் எடுக்க உதவக்கூடும்.

## நிபந்தனை...

*ஒரேயடியாகக் குழம்பிவிட்டது.*

*யாரிடமாவது விசாரிக்கத் தொடங்கினால் தேவையற்ற சிக்கல்களை அவரே உருவாக்குவதாகவும் ஆகிவிடும்...*

*வழக்கத்திற்கு மாறாக நேரே சென்று அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் தயக்கமாக இருந்தது.*

*சின்னம்மா திரும்பி வரும்வரை அவர் காத்திருக்கவேண்டும்.*

*ஆனால் சின்னம்மாவுக்குப் பதிலாகச் செல்வமணியே அவரைத்தேடி வந்துவிட்டாள்.*

*அவளுடை கோலத்தைப் பார்க்க அவருக்கும் அழுகை வந்துவிடும் போலிருந்தது.*

*வாத்தியார்! வீட்டிலை எல்லாரும் என்னைத்தான் திட்டிக்கொண்டிருக்கினம்...*

*நானும் ஏதோ கேள்விப்பட்டன் என்ன நடந்தது?*

*இந்தக் காலத்திலை ஆடம்பரமொண்டும் வேண்டாம் எண்டன் அவைகேட்கேல்லை நான் விட்டுக்குடுத்திட்டன்.. ஆனா.. ஒரே ஒரு விஷயத்திலை மட்டும் என்னாலை விட்டுக் குடுக்க முடியேல்லை...*

*கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லன்.*

*கலியாணத்தை வீடியோவிலை எடுக்கிறதை வேண்டாம் எண்டு சொன்னன்.. ஒருத்தரும் கேக்கினமில்லை.*

*சந்திரன்ரை நெருங்கிய சொந்தக்காரர் எண்டிறவையெல்லாம் வெளிநாடுகளிலைதான் இருக்கினம் செல்வமணி .. அதோடை வெளிநாட்டுச் சினேகிதரும் சந்திரனுக்குக் கனபேர் இருக்கினமாம். கலியாணம் எண்டிறது சீவியத்திலை ஒருக்காத்தான் நடக்கிற விஷயம் பிள்ளை.... அதை வீடியோவிலை பிடிச்சுத் தன்ரை ஆக்களுக்குப் போட்டுக் காட்ட விரும்பிறதிலை என்ன பிழை?*

*நீங்களாவது என்னை விளங்கிக் கொள்ளுவீங்கள் எண்டு நினைச்சன்.. செல்வமணியின் குரல் கம்மியது.*

*ஒரு சின்ன விஷயத்துக்காக இப்படி உணச்சிவசப்படக்கூடாது. அவையளே எல்லாச் சிலவையும் ஏற்றுக்கொள்ளினம்.. வீடியோ எடுப்பதைத் தடுக்கிறது சரி எண்டு நான் சொல்ல மாட்டன்.. இதிலும் நீ விட்டுக் குடுக்கத்தான் வேனும்.*

*செலவுக்காக நான் சொல்லேல்லை.. தெய்வம் போலை இருந்து நீங்கள் செய்யிற உதவியையும் மறக்கேல்லை வாத்தியார். ஆனா—*

*சொல்லு செல்வமணி பயப்பிடாமற்சொல்லு*

*பிடிவாதம் எண்டு நினைக்காதேங்கோ வாத்தியார் எங்கடை இனசனம் எத்தனையோ பேர் அகதியளாகி விட்டினம்... அநியாயப்பட்டவங்களின்ரை ஷெல்லடியாலை வீடு கோவில் பாடசாலையெண்டு எல்லாம் தரை மடட்டமாய்க்கிடக்கு... ஆனமான சாப்பாடில்லாமல்.. மருந்துகள் இல்லாமல் எத்தினைபேர் செத்துக்கொண்டிருக்கினம்.. இதுகளெல்லாத்தையும் மறைச்சு வைச்சுக்கொண்டு பெயின்ற அடிச்ச வீடுகளையும் காஞ்சிபுரத்தையும் பட்டுவேட்டியையும் கட்டின ஆக்களையும் வீடியோவிலை பிடிச்சு வெளிநாட்டுக்கு அனுப்பப் போறமா... போலியான ஒரு யாழ்ப்பாணத்தை வெளிநாட்டிலை காட்டப் பொறமா.. நாங்களே எங்களுக்குச் செய்யிற ஒரு துரோகமாக உங்களுக்குத் தெரியேல்லையா வாத்தியார்?...*

*செல்வமணி போய்விட்டாள். அவருடைய பதிலை எதிர்பாராமலே அவள் போய் விட்டாள்.*

*ஆனால் பதிலைச் சொல்வதற்கு அவர் போய்க்கொண்டிருக்கிறார் சந்திரனின் வீட்டிற்கு.*

தமிழர் கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளை நடாத்தும்

## அன்னை பூபதி நினைவுப்போட்டி 1995

**உரிமைக்காக உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த உலகின் முதற்பெண், அகிம்சையை ஆயுதமாக்கி அந்நியரை விரட்டிய வீராங்கனை அன்னைபூபதியை நினைவு கூருமுகமாக தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடாத்தவுள்ளது.**

### போட்டிகளுக்கான விதிமுறைகள்

10வயதிற்குட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவு எனவும், 11 வயதிலிருந்து 15 வயதுவரை நடுப்பிரிவு எனவும், 16 வயதிலிருந்து 19 வயதுவரை மேற்பிரிவு எனவும், 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் அதிமேற்பிரிவு எனவும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து திறமை பரிசீலிக்கப்படும்.

**கீழ்ப்பிரிவு: 01.04.1984 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்.**
**நடுப்பிரிவு: 01.04.1979 இற்கும் 31.03.1984 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.**
**மேற்பிரிவு: 01.04.1975 இற்கும் 31.03.1979 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.**
**அதிமேற்பிரிவு: 31.03.1975 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**

**"அன்னைபூபதி"** என்ற தலைப்பில் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெறும்.

கீழ்ப்பிரிவுக்கான கட்டுரை 80 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 3 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும்.

நடுப்பிரிவுக்கான கட்டுரை 140 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும்.

மேற்பிரிவுக்கான கட்டுரை 200 சொற்களுக்கு மேற்படாமலும், பேச்சு 7 நிமிடங்களுக்கு மேற்படாமலும் அமையவேண்டும்.

அதிமேற்பிரிவுக்கான பேச்சு 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் அமையவேண்டும்.

அதிமேற்பிரிவினருக்கு கட்டுரைப்போட்டிகள் நடாத்தப்படமாட்டாது.

கவிதைப்போட்டிகள் மேற்பிரிவினருக்கும், அதிமேற்பிரிவினருக்கும் மட்டுமே நடாத்தப்படும்.

மேற்பிரிவினருக்கான கவிதை 16 வரிகளுக்கு மேற்படாமலும், அதிமேற்பிரிவினருக்கான கவிதை 32 வரிகளுக்கு மேற்படாமலும் அமையவேண்டும். எழுதப்பட்ட கவிதை ஓசை நயத்துடன் படித்துக் காட்டும்படி கேட்கப்படுவர். கவிதையின் பிரதியொன்று போட்டிமண்டபத்தில் கையளித்தல் வேண்டும்.

கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய துறைகளுக்கான போட்டியாளர்களின் வசதிகருதி மூன்றுபிரிவுகளாக டோட்முண்ட், கனோவர், ஸ்ருட்காட் ஆகிய நகரங்களில் போட்டிகள் நடாத்தப்பட்டு, தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்கள் இறுதிப்போட்டிக்கு அழைக்கப்படுவர்.

**அனைத்துப் போட்டிகளுக்கும் விண்ணப்பஞ் செய்வதற்கான இறுதிநாள்: 31.03.1995**

**தொடர்பு முகவரி: Kulturelle Organaization der Tamilien e.V
Postfach 1160
37441 Bad Sachsa**

**தொலைபேசி இலக்கம்: 05523-8608 தமிழர்கலைபண்பாட்டுக்கழகம்
யேர்மனிக்கிளை**

**-புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்-**

தமிழர் கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளை நடாத்தும்

## அன்னை பூபதி நினைவுப்போட்டி 1995

### விண்ணப்பப்படிவம்

1) விண்ணப்பதாரரின் முழுப்பெயர்: திரு/ திருமதி/ செல்வன்/ செல்வி
..........................................................................
2) பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர் ..........................................................
3) முகவரி: ...........................................................................................
..........................................................................
4) தொலைபேசி இலக்கம்:...................................................
5) விண்ணப்பதாரரின் பிறந்தநாள்: நாள்......... மாதம் ...........ஆண்டு..............
6) பங்குபற்ற விரும்புந்துறை: கவிதை/ கட்டுரை/ பேச்சு
7) பங்குபற்றவிருக்கும் பிரிவு: கீழ்ப்பிரிவு/ நடுப்பிரிவு/ மேற்பிரிவு/ அதிமேற்பிரிவு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான், போட்டியில் பங்கேற்க விரும்புகிறேனென்றும், நடுவர் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேனென்றும் உறுதிகூறுகிறேன்.

.................................... ....................................
பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம் — விண்ணப்பதாரர் கையொப்பம்

*பி.கு: 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு (31.03.1995) முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் அல்லது அடையாள அட்டை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவர்.*

தமிழர் கலைபண்பாட்டுக்கழகம், யேர்மனிக்கிளை

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

## ஐக்கிய அமெரிக்காவில் வதியும் தமிழ்ச் சகோதர, சகோதரிகளின் கவனத்திற்கு...!

உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - ஐக்கிய அமெரிக்க அமைப்பானது அண்மையில் தனது செயல் நடவடிக்கைகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் நலன்கருதி, அவர்களுக்கான ஆதரவு குறித்து அன்றேல் வேறு ஏதும் விபரங்கள் வேண்டின் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். உலகத்தமிழர் செய்தித்தாள், ஒலி - ஒளி நாடா வெளியீடுகள், நூற்பிரசுரங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும் ஏதுவாக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழீழ நிகழ்வுகளைத் தொலைபேசி இணைப்பின் மூலம் செய்திவடிவில், கீழ்வரும் எண்களில் இருந்து தெரிந்துகொள்ளவும் வகைசெய்யப்பட்டுள்ளது.

**பொஸ்டன் பகுதி (ஆங்கிலம்) - (617) 639 8125**
**பொஸ்டன் பகுதி (தமிழ்) - (617) 389 4938**
**நியூயோர்க் பகுதி (தமிழ்) - (718) 739 1202**
**நியூயேர்சி பகுதி (தமிழ்) - (201) 997 1297**

**சிக்காகோ பகுதி (தமிழ்) - (312) 588 1039**
**கலிபோர்னியாப் பகுதி (தமிழ்) - (408) 244 9473**
**புளொரிடாப் பகுதி (தமிழ்) - (407) 736 7363**

**மேலதிக விபரங்களுக்கு: அலுவலக முகவரி**

**WORLD TAMIL COORDINATING COMMITTEE,
SUITE 1L,
170 - 10 CEDARCROFT ROAD,
JAMAICA, NY 11432,
USA.**

**தொலைபேசி / Fax: 718 657 9463**

## போர் முடிவுறும்...

அழுத்தங்களுள் அவர் சிக்குண்டு நிற்பது போல் தெரிகிறது. சிறீலங்கா அரசு தமிழர் தாயகத்தின் மேலான பொருண்மியத்தடையை விலக்கிக்கொள்ளவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முற்றுகையை வலுப்படுத்துவதற்காகவும் தமிழர் தாயகத்தின் மீது பாரிய தாக்குதல்களை நிகழ்த்துவதற்காகவும் அமைத்த பூநகரி இராணுவ முகாமை அகற்றவில்லை. பூநகரி முகாமை அகற்றுதல், சிறீலங்காவின் அரசியற் தீர்வுமேலான அக்கறையை உறுதியான முறையில் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் என விடுதலைப் புலிகள் சிறீலங்காவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆயினும், சிறீலங்கா அரசு இதை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியமை வேதனைக்குரியது. ஆக்கிரமிப்புப் போரின் விளைவாகத் தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து, நாளுக்குநாள் மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்துவைக்கக்கூடிய வகையிலான விடயங்களுக்கு முதன்மைத்துவம் கொடுத்து, அடுத்த கட்டப் பேச்சுவாரத்தைக்கான நாளை சிறீலங்கா நிர்ணயிக்கவேண்டும். அதன்வழியாக சிக்கலான தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய ஆரோக்கியமான பேச்சு வார்த்தைக்குள் நுழையலாம்" எனக்கூறிய லோறன்ஸ் திலகர் அவர்கள் செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், "வெளிநாட்டு அரசு ஒன்று மத்தியஸ்த்தம் வகிக்க முன்வந்தால், அதனை விடுதலைப் புலிகள் எப்பொழுதும் ஆதரவுடன் வரவேற்பார்கள்" எனத் தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...
## (இணைப்பு)

## 16 போர்க் கைதி...
முதலாம் பக்கத் தொடர்ச்சி...

பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், உண்ணாவிரதிகளை விடுதலை செய்வது தொடர்பாக சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் எதுவித தொடர்பையும் மேற்கொள்ளவில்லை. இவ்வுண்ணாவிரதிகளின் உடல்நிலை மோசமடைந்து வருவது பற்றி, போதிய அளவில் செய்திகள் வெளியிடப் பட்ட போதிலும் சிறீலங்கா அரசு இவ்வுண்ணா விரதத்திற்கு மதிப்பளித்து, எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு, சாவைநோக்கிச் யெுசன்று கொண்டிருக்கும் இவர்களின் நிலை சிறீலங்கா அரசில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஆமினும் உண்ணாவிரதத்திற்கும் மனிதாய உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, தலைவர் பிரபாகரனின் பணிப்பில் இவர்கள் விடுவிக்கப் படுகின்றனர்" என்றார்.

பேராயர் பெர்னாண்டோ அவர்கள், "பெருமகிழ்ச்சியுடன் விடுதலைப் புலிகள் மனிதாயம்மிகு இந்நடவடிக்கையினால் அமைதிக்கான தங்கள் முன்னெடுப்பையும் பங்களிப்பையும் மீண்டும் ஒருமுறை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்" என்றார்.

விடுவிக்கப்பட்ட போர்க் கைதிகள் அனைவரும் மனிதாய அடிப்படையில் தங்களை விடுவித்த மனிதநேயம்மிகு செயலுக்காக விடுதலைப் புலிகளுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

### வருந்துகிறோம்!

பிந்திக் கிடைத்த செய்திகளையும் இவ் விதழில் இணைத்தமையால், பிரத்தியேக இணைப்பு ஏற்பட்டமைக்காக வருந்துகின்றோம்.

வாசகர்கள் சிரமத்திற்கு மன்னிக்குக!

ஆ–ர்

## வெளிநாட்டு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது செயலாளர் வொயினர், நெதர்லாந்தின் இரண்டாவது செயலாளர் பேடினன், பிரான்சின் பண்பாட்டு அதிகாரி பரோ ஜெனிப், அவுஸ்திரேலியத் தூதரக இரண்டாவது அதிகாரி டொமினிக், கனடாவின் முதற் செயலாளர் முரே யூலியன், பிரித்தானியாவின் இரண்டாவது செயலாளர் வெல்ஸ் பொலியோ ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ்ப்பாணத்து க்குச் சென்றி ருந்தனர்.

இவர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், திரு. வே. பாலகுமாரன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ரவி, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் டொமினிக், தமிழீழ பொருண்மிய ஆலோசகர் திரு. அருமைநாயகம் ஆகியோர் அடங்கிய குழுவினர் சுண்டிக்குளியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியற் தலைமையகத்தில் சந்தித்து உரையாடினர்.

அமைதிக்கான பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டைநிலை ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகள் அல்லாது, சிறீலங்கா அரசுத்தரப்பினரே காரணம் என வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்கு விளக்கிய குழுவினர், அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு விடுதலைப் புலிகள் என்றும் தயாராக இருக்கிறார்கள் என்பதை வலியுறுத்தினர். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் சிறீலங்கா அரசு மோதல் தவிர்ப்பு ஏற்பாட்டை மீறியிருப்பதனால், கண்காணிப்புக் குழுக்கள் உடனடியாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தனர். அரசியற் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் பரிசீலிப்பதற்குத் தயாராக இருப்பதாகக் கூறிய விடுதலைப் புலிகள், அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்குமாறு சிறீலங்கா அரசை வற்புறுத்துமாறும் இராஜ தந்திரிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இராஜதந்திரிகள் அடுத்தநாள் மாலை பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு கப்பல் மூலம் சென்று, அன்று மாலையே கொழும்பு திரும்பினர்.

## விசேட வைப்பகம்..
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தனர். மேற்படி கோரிக்கையினை விடுதலைப்புலிகளின்அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும், "வடக்கு – கிழக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விரிவான திட்டம் ஒன்றையும் விடுதலைப் புலிகள் இராஜதந்திரிகளிடம் கையளித்துள்ளனர்;

புனரமைப்பை மேற்கொள்வதற்கு புறச்சூழல் உகந்ததாக இருக்க வேண்டும். புனரமைப்புப் பணிகளுக்கான நிதியும் வளங்களும் தவறான முறையில் பயன்படுத்தப் படாதிருப்பதை உறுதிசெய்வது அவசியம். புனரமைப்பைக் கண்காணிப்பதற்கான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அதிகாரசபை ஒன்று நிறுவப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினோம். யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கென இரு மின்பிறப்பாக்கிகளை சிறீலங்கா அரசு அனுப்பி வைத்திருக்கின்றது. அவற்றை இயக்க எரிபொருள் இல்லை. இதற்குப் பெருமளவு டீசல் தேவை. எனவே எரிபொருட்கள் மற்றும் பொருண்மியத்தடை முற்றாக அகற்றப்பட வேண்டும். கப்பல் மூலமாகக் கொண்டு வருவதினால், பொருட்களுக்கான தேவையை முற்றாக நிரம்பல்செய்ய முடியாது என்பதுடன், தேவைக்கு ஏற்றமாதிரித் திருப்திகரமாக ஈடுசெய்யவும் முடியாது" என்றார்.

# சுவிஸ்-லவுசானில்
# இன்னிசை இரவு

11.03.1995 சனிக்கிழமை லவுசானில் (சுவிஸ்) "வோ" மாநிலத்



தமிழ்ச் சபையின் ஆதரவில் காந்தரூபன் அறிவுச்சோலைச் சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக, சங்கமம் இசைக்குழுவினரின் இன்னிசை இரவு எனும் நிகழ்ச்சி இடம்பெற்றது.
தொடக்க நிகழ்வாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த பொதுமக்களிற்கும், போராளிகளுக்குமாக இரண்டு நிமிட அஞ்சலியைத் தொடர்ந்து வரவேற்புரை இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்ட 5000 சுவிஸ் பிராங் பணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்களிடம் காந்தரூபன் அறிவுச்சோலை நிர்வாகத்திடம் சேர்ப்பிக்குமாறு ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்ட இன்னும் 2000 சுவிஸ் பிராங் பணமும் அனுப்பிவைக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.
தொடர்ந்து உரையாற்றிய முரளிதரன் அவர்கள், இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வரை சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலை சம்பந்தமாகவும், அம்மக்களது தேவைகளுக்குமாகவும் பணியாற்றியவை இரண்டு அமைப்புக்களே என்றும் அவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமுமே ஆகும்; ஆனால் இன்று விளையாட்டுக் கழகங்களும், தமிழ் மன்றங்களும், இசைக் குழுக்களும், ஆன்மீக அமைப்புக்களும் தமிழீழ விடுதலைக்காகவும் அம்மக்களது தேவைகளுக்காகவும் செயற்படுவது ஒரு ஆரோக்கியமான நல்ல அறிகுறி என்றும், இதன் அத்தியாவசியத்தை விளக்கிய அவர், இந்த அமைப்புக்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவும் உதவியும் என்றும் இருக்கும் என்றார். அந்த வரிசையில் வோ மாநிலத் தமிழ்ச் சபையையும், சங்கமம் இசைக்குழுவினரையும் பாராட்டினார்.
இன்னிசை இரவு நிகழ்ச்சியில் முப்பதிற்கும் மேற்பட்ட பக்தி, திரைப்பட, புரட்சிப் பாடல்களும் பாடப்பட்டன. இடைவேளையின்போது தமிழர் கலை, பண்பாட்டு ஒன்றியத்தினரால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டிக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. பின்னர் மீண்டும் மயிலம்மான்எனும் நாடகமும் இடம்பெற்றது. நிகழ்ச்சிகள் குறித்த நேரத்திலும் பார்க்க, இரண்டு மணிநேரம் தாமதமாகவே தொடங்கியது. எனினும் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்

காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.

எனது ஊரான தர்மபுரத்தில் நான் எனது அம்மா அப்பாவுடன் வாழ்ந்து வந்தேன், எனது அம்மா மிகவும் அன்பானவர்.
ஆனால் எனது அப்பாவோ குடிகாரர் கொடுமையானவர். எனது அம்மாவும் அப்பாவும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வர். மது போதையில் அப்பா அம்மாவிற்கு எப்பொழுதும். அடிப்பார். எங்கள் ஊரில் இந்திய ராணுவம் வந்தமையால் அதை ஒரு சாட்டாக வைத்து எங்கள் அப்பா எங்கள் காணியை இந்தியா போவதற்கென்று விற்றார். அம்மா தான் இந்தியா வரமுடியாதெனக் கூறினார். அப்பா அம்மாவை அடித்துக் கஸ்டப்படுத்தி கூட்டிக்கொண்டு போனார். இந்தியா போவதற்காக ஒரு மாதமாக நாங்கள் கோயிலில் தங்கியிருந்தோம். சாப்பாடு கரும்பு உரிக்க அம்மாபோவா அந்தக்காசைக் கொண்டு எங்களுக்குச் சாப்பாடு வாங்கித்தருவா நாங்கள் பசியில் ஒவ்வொரு நாளும் துடித்துப் போவோம். ஒரு மாதத்திற்குப் பின் நாங்கள் இந்தியா போனோம். அங்கே என் அம்மாவிற்கு அப்பா ஒவ்வொரு நாளும் அடிப்பார். அவருக்கு வேறு ஒரு மனைவியும் இருக்கின்றார் என்று அறிந்தோம். கத்தி எடுப்பார் அம்மாவைக் குத்துவதற்கு நீ ஏன் சாகாமல் இருக்கிறாய் என்று கேட்டு அம்மாவை துன்புறத்துவார். இரு நாள் வருடம் நினைவில்லை அப்பா நன்றாக குடித்து விட்டு வந்தார். நீ ஒரு ஒழுக்கம் கெட்டவள் என்று அம்மாவை ஏசி அடித்துவிட்டு கத்தியை எடுத்து கதறக் கதறக்குத்தினார் குத்தி விட்டு மண்ணெண்ணெய் ஊற்றி கொழுத்தினார். அம்மா கதறிக்கொண்டே உருண்டு நெருப்பை அணைக்க முயற்சி செய்தா. நான் தண்ணீர் எடுத்து அம்மா மேல் ஊற்றினேன். ஈரச்சாக்கை எடுத்துப்போட்டு அம்மாவின் மேல் மூடி நெருப்பை அணைத்தேன். என்னுடைய மாமி எல்லோரும் ஓடி வந்தார்கள் அவர்கள் அம்மாவைக் காரில் ஏற்றிக்கொண்டு வைத்திய சாலைக்குக் கொண்டு போனார்கள்.




நானும் அழுது கொண்டு போனேன்.
அடுத்த நாள் 12 மணிக்கு அம்மா இறந்து விட்டார். அம்மாவை தகனம் செய்து விட்டு வீட்டுக்கு வந்தோம் நான் கதறிக்கதறி அழுதேன். என்னுடை மாமி என்னையும் தங்கச்சியையும் கூட்டிக் கொண்டு இலங்கைக்கு வந்தார். இலங்கையில் நாங்கள் மாமியுடன் தங்கியிருந்தபோது அப்பா வந்தார் என்னையும் தங்கச்சியையும் தன்னுடன் வரும்படி அழைத்தார். நான் பயத்தினால் வரமுடியாது என்று அழுதேன். அப்பா பலவந்தமாக என்னைக் கூட்டிச் சென்றார் அங்கே என்னுடைய அப்பாவின் மற்றைய மனைவியும் இருந்தார். ஒரு நாள் அப்பாவின் கொடுமை தாங்கமுடியாமல் அந்த அம்மா ஓடி விட்டார். அவர்போய் விட்டபிறகு என்னுடைய வேலை இன்னும் அதிகமாகி விட்டதால் நான் தான் சமையில் செய்வேன். சமையல் செய்வதில் ஏதும் பிழை செய்தால் எனக்கு அடி அடியென்று அடிப்பார்.
ஒரு நாள் இப்படித்தான் நான் சமைத்த சாப்பாட்டை சாப்பிடும் போது கல்லு அப்பாவுக்கு கடிபட்டு கோபம் கொண்ட அப்பா எனக்கு ஆவேசத்துடன் அடித்தார். பின்னர் நெருப்பில் எரிந்த கட்டையால் சுட்டார். என்றால் தாங்க முடியவில்லை. நான் தாயகம் இல்லத்தைப்பற்றி அறிந்தேன். எனவே நான் வீட்டை விட்டு ஓடி தாயகம் இல்லத்திற்கு வந்து சேர்ந்தேன்.
அங்கு என்னுடைய ஆரம்பக்கல்வியைக் கற்றேன், பின் என்னை சில மாமாக்கள்,அறிவுச்சோலைக்குக் கொண்டுவந்தார்கள் இங்கு நான் நன்றாகக் கவனிக்கப் படுகின்றேன்.

கமல்ராஜ்
ஆண்டு - 5

முற்றும்

# டென்மார்க்கில்
# செஞ்சோலை மாலை

டென்மார்க் செஞ்சோலைக் கிளையினரால் நடாத்தப்பட்ட செஞ்சோலைக் கலைமாலை கடந்த 25.02.1995 சனிக்கிழமையன்று "கேர்னிங்"நகரில் நடாத்தப்பட்டது.
செஞ்சாலைச் சிறுவர்களுக்கான நிதி சேகரிப்பிற்காக கலை, இசை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. யேர்மன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் சிறப்பாக நாட்டிய நாடகம் ஒன்று தயாரித்து வழங்கப்பட்டது. இத்துடன் விடுதலைப் பாடல்களுக்கான அபிநயமும் செய்துகாட்டப்பட்டது. இசையும் பாடல்களின் தேர்வும் அவற்றுக்கான சிறப்பு விளக்கங்களும் பெருமளவு கலைஞர்களும் இணைந்து, இந்த நாட்டிய நிகழ்ச்சியைத் தயாரித்திருந்தனர்.
டென்மார்க் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் இசைக் குழுவினர் செஞ்சோலைப் பாடல்களை இசைத்தனர். இதில் புதிதாக இயற்றப்பட்ட செஞ்சோலைப் பாடல்களும் பாடப்பட்டமை சிறப்பம்சமாக இருந்தது. டென்மார்க் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பாடகர்கள் கலந்துகொண்டனர்.



தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட "பிஞ்சுமனம்" திரைப்படம் நிகழ்ச்சிகளின் இறுதியில் காட்டப்பட்டது. இத்திரைப்படம் அனைத்து மக்களாலும் பெரிதும் கிலாகித்துப் பேசப்பட்டது. செஞ்சோலைக் கலைமாலைக்கு ஏற்ற பொருத்தப்பாடுடைய செய்திகள் பலதை இத்திரைப்படம் எடுத்தியம்பியது.
நிகழ்ச்சியில் திரு. கா. சிவநாதன் சிறப்புரையாற்றினார். தமிழர் கலைகள் இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து, ஆற்றவேண்டிய கடப்பாடுகளை எடுத்துரைத்தார். மனிதகுல விடிவுக்குத் துணைபோன போர்க் கருவிகளான வேல், சூலாயுதம், தண்டனைக் கருவியாக விளங்கிய சிலுவை போன்றவற்றை இன்று மனிதர்கள் வழிபாட்டுக் கருவிகளாக்கியுள்ளனர். அவைகளை மையமாக வைத்தே பாரம்பரியக் கலைகள் உருவாக்கப்பட்டன. அதுபோலவே இன்றைய தமிழின மீட்சிக்கான போராட்டத்தையும் கலைகள் உயர்வாகப் போற்றவேண்டும். அவற்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவேண்டுமென்று வலியுறுத்தினார்.
வரவேற்புரையை நிகழ்த்திய கே. எஸ். துரை கூறும்போது, நெப்போலியனை வெற்றிகொண்ட வெலிஸ்டன், தான் அதற்கான பயிற்சியைத் தனது தொடக்கப்பள்ளியான ஈஸ்டனிலேயே பெற்றுவிட்டதாகக் கூறினார். ஆளுமையுள்ள மனிதர்களை அவர்களுடைய பாடசாலைகளே உருவாக்குகின்றன என்றார்.

# வெளிவந்துவிட்டது!







**கற்பிட்டிக் கடலில் கரும்புலிகள்**

மன்னார் பொலிஸ் நிலையம்மீது அதிரடித் தாக்குதல்

அங்கயற்கண்ணியின் வீரசாதனை!

**பலாலி இராணுவமுகாமினுள் உட்புகுந்த கரும்புலிகள்**

திலீபனின்நினைவாய் 7ஆம் ஆண்டில்

நீங்காத நினைவுகள் – லெப்.கேர்ணல் ராதா

## விடிகின்ற போதில் போதாகி மலர்வீர்

## மடிந்தும் மடியாத மாவீரர் நீவிர்

**மேலதிக விபரங்களுக்கு, கீழேயுள்ள முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்**

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers.